திசை புதிது



வரதர்
சாந்தன்
சாரங்கா
துளசிராம்
செல்வமனோகரன்
சேந்தன்
திவ்வியானந்
சக்கரத்தாழ்வான்
சிவரமணி
ஜெயசீலன்
மயூரன்
தமிழினி
ஆகர்ஷியா

இதழ் 01

அசல் 22 கரட் தங்க நகைகளை
கைதேர்ந்த தொழில்நுட்ப வல்லுநர்களால்
மனதைக் கவரும் டிசைன்களில்
குறித்த தவணையில் பெற்றுக் கொள்ள

சிவா
கோல்ட் ஹவுஸ்

56, தர்மலிங்கம் வீதி,
வவுனியா
தொ.பே.024 - 23034

தரம் குன்றா நகைகள் உத்தரவாதத்துடன்

SIVAA GOLD HOUSE
56, Tharmalingam Road, Vavuniya.
Jewellers and Diamond Merchants

நேர்காணல்
சோ.ப. **15**
சிறுகதை **10**
ச.சாரங்கா
எழில் நினைவுகள் **04**
சாந்தன்
ஆத்மா : ஓர் அறிமுகம் **25**
துளசிராம்
உயிர்த் தொழில்நுட்பத்தில் ஓர்
உன்னத புரட்சி **28**
சேந்தன்
மூத்த எழுத்தாளர் வரதர் **35**
ஊழையும் உப்பக்கம்
காண்போம் **37**
வரதர்
தமிழ்த்திரைப்படங்கள் :
மாயையும் யதார்த்தமும் **42**
யேசுராசா உரை

கவிதைகள்
சக்கரத்தாழ்வான் **03**
மு.மயூரன் **08**
த.ஜெயசீலன் **26**
கு.திவ்வியானந் **34**
ஆகர்ஷியா **40**

சிவரமணி :
ஒரு கவிதையும்
இரு குறிப்புகளும் **32**
மொழிபெயர்ப்புக் கவிதை **22**
தமிழினி

திசை புதிது

இதழ் - 01

ஆசிரியர்
~ கோபி ~
இணையாசிரியர்
க.சசீவன்

ஓவியம்
~ அமளி~
தயாரிப்பில் உதவி
ந.சந்தோஷ்
து.அனுஜன்

வணக்கம்

இளையவர்களால்
இளையவர்களுக்காகத்
தொடங்கப் பட்டிருக்கும் புதிய இதழ் இது.

புதிய சிந்தனைகளை
புதிய முகங்களை
புதிய கருத்துக்களைத்
தேடிப் புறப்பட்டிருக்கிறோம்.

திசை புதிது

இளையவர்களிடமிருந்து
அதிக பங்களிப்பையும்
மூத்தவர்களிடமிருந்து
சிந்தனை, அனுபவப் பகிர்வுகளையும்
எதிர்பார்க்கிறோம்

இது தேடல் தான்
இத் தேடலின் வெற்றி
எங்களில் மட்டுமல்ல
உங்களிலும் தான் தங்கியிருக்கிறது.

நம்பிக்கையுடன்

ஆ.கு.

திசை புதிது

(தனிச் சுற்றுக்கு)
இதழ் 01 (2003-1)
ஜனவரி-மார்ச் 2003
தருகை - 25/-

படைப்புகள், மடல்கள்
மற்றும் சந்தா தொடர்புகளுக்கு

T.Kopinath,
90/3, New Chetty Street,
Colombo-13

மின்னஞ்சல்-
thisai_puthithu@yahoo.com

படைப்புக்களின் உரிமையும் பொறுப்பும் படைப்பாளிகளினுடையதே. பிரசுரமாகாத படைப்புகளை மீளப்பெற விரும்புவோர் போதிய தபாற்தலைகளைச் சேர்த்து அனுப்புங்கள்.

கனவின் தொடர்ச்சி.

உன்னை விட,
உன்னை
நான் நன்றாகவே அறிவேன்.
முன்னைய பொழுதுகளிலெல்லாம்
நீ பல்வேறு வண்ணங்களினாலான
சட்டைகளைப் போர்த்தியிருந்தாய்.
அப்போதெல்லாம்,
உனது கனவு மாளிகையெங்கும்
பல வண்ணங்கள் நிறைந்திருந்தன.
உன் கனவுகளில் எல்லாம்
வண்ணப் புகைகள் பரவிச் சென்றன.
பின்பு ஒருநாள்,
உன்னைச் சிலுவையில் அறைந்தார்கள்.
உன் கனவு பற்றியெரிந்து சாம்பல் மேடாயிற்று.
அதன் பின்பான பொழுதுகளில்,
நீ வண்ணமயமான சட்டைகளைப் போர்த்தியிருக்கவில்லை.
கறுப்புச் சட்டையுடன் அல்லது
நிர்வாணமாகவே என்முன் தோன்றினாய்.
உனது கனவின் வண்ணங்கள் எல்லாம்
கறுப்பாக மாறியதை அறிவேன்.
நீ இப்பொழுது,
உனது வண்ணமயமான கனவுக் கோட்டைகளின்,
சாம்பல் மேடுகளிலிருந்து,
மீண்டும் கனவு கண்டுகொண்டிருக்கின்றாய்.

சக்கரத்தாழ்வான்.

2002

'எழில்' நினைவுகள்

~ சாந்தன் ~

'திசை புதிது' சஞ்சிகையின் வெளியீட்டாளர்கள் இன்னமும் தமது மாணவப் பருவத்திலேயே இருப்பவர்கள். இருந்தும், தமது ஆர்வத்தாலும் முயற்சியாலும் இச்சஞ்சிகையை வெளியிட அவர்கள் முனைந்து செயலாற்றுவதானது, எனக்கு என் மாணவப் பருவத்தையும் அப்போது நாம் வெளியிட்ட 'எழில்' சஞ்சிகையையும் நினைவூட்டுவதாக அமைந்தது.

1968 அக்டோபரில் கட்டுபெத்தை தொழில்நுட்பக் கல்லூரியில் அனுமதி கிடைதது அங்கு சேர்ந்தேன். இன்று மொறட்டுவைப் பல்கலைக்கழகமாக முழுவளர்ச்சி பெற்று மிளிரும் அக்கல்வித்தாயின் பரிணாம வளர்ச்சியும் பல படிகளைக் கண்டது.

அறுபதுகளுக்கு முன் மருதானையிலுள்ள தொழில்நுட்பக் கல்லூரியிலே ஒரே நிறுவனமாக அமைந்து பொறியியல், வர்த்தகம் போன்ற துறைகளிலான தொழில்நுட்பப் பயிற்சிகளை அளித்து வந்தது. பின்னர் அறுபதுகளின் ஆரம்பத்தில் பொறியியல் துறைசார் கற்கைநெறிகளுக்கெனவே தொடக்கப்பட்டது Institute of Practical Technology எனும் நிறுவனம். யுனெஸ்கோ அனுசரணையுடனும் கனேடிய உதவியுடனும் உதயமான இந்நிறுவனம், விரைவிலேயே Ceylon College of Technology என ஆகிற்று. இவ்வேளையிலேயே நான் அங்கு மாணவனானேன். தொடர்ந்து, எழுபதுகளின் நடுப்பகுதியில் இது இலங்கைப் பல்கலைக்கழகத்தின் கட்டுபெத்தை வளாகமாகவும்; அதற்குச் சில ஆண்டுகளின் பின்னர் முழுமையான மொறட்டுவைப் பல்கலைக்கழகமாகவும் ஆயிற்று.

நான் சேர்ந்தது ஓராண்டுகால முழுநேர 'பொறியியல் வரைஞர்' பயிற்சி நெறியில். இதனை 69ல் முடித்த பின் தொடர்ந்து மூன்றாண்டுகள் Evening Course எனப்பட்ட பகுதிநேர சான்றிதழ் நெறியில் கட்டுமானப் பிரிவில் அனுமதி கிட்டிற்று. இப்படியாக நாலாண்டு கால வாசம்.

68 அக்டோபரில் நான் இங்கு சேர்ந்த போதே 'எழில் கூட்டமைப்பு' ஓரளவு கருக்கொண்டிருந்தது. அப்போது 'டிப்ரெக்' எனப்பட்ட பின்னர் பொறியியல் பட்ட நெறியாக்கப்பட்ட பயிற்சியில் இரண்டாண்டுகளைப் பூர்த்தி செய்திருந்த மாவை. நித்தியானந்தன், அதே நெறியில் முதலாமாண்டைப் பூர்த்தி செய்திருந்த தில்லைக்கூத்தன் என்ற சிவசுப்பிரமணியம், செல்வராசா, தர்மபாலா; மற்றும் இப்போது NDT எனப்படுகிற (அப்போது JTO எனப்பட்ட) நெறியில் இணைந்திருந்த ஜெயநாதன், லஷ்மன் ஞானப்பிரகாசம் ஆகியோரும் மற்றும் சிலரும் எழில் கூட்டமைப்பினை உருவாக்கியிருந்தனர். என்னை ஏலவே ஓரளவு அறிந்திருந்த

மாவை நித்தியானந்தன் போனதும் போகாததுமாக என்னையும் அதில் சேர்த்துக் கொண்டார். இப்படியாக, 'எழில்' இன் புண்ணியத்தால் மூத்த மாணவர்களின் நெருங்கிய நட்பும் சகவாசமும் எனக்கு உடனடியாகவே வாய்த்தன.

'எழி' லின் முதலாவது இதழ், பெப்ரவரி 1969ல் வெளியாயிற்று. 'விஞ்ஞான, கலை, இலக்கிய மாத இதழ்' என்ற மகுடத்துடன் 'விலை சதம் 30' என வெளியிடப்பட்டது. அந்த முதல் இதழ் டொக்டர். கிரீன் அவர்கட்குச் சமர்ப்பணம் செய்யப்பட்டிருந்தது. கலை-இலக்கியத்துடன், தமிழில் அறிவியலும் செழிக்க வேண்டுமென்ற முனைப்பு 'எழி' லுக்கு இலட்சியமாக இருந்தது. இதனை வெளிப்படுத்துவது போல, அவ்விதழில் ஒரு சிறுகதை, சில கவிதைகள், நாடகக்கருத்தரங்கம் போன்றவற்றுடன் இரண்டு விஞ்ஞான/தொழில்நுட்பக் கட்டுரைகளும் வெளியிடப்பட்டிருந்தன. அவற்றிலொன்று திரு. வில்மற் என்ற எமது நிறுவனத்தில் பணிபுரிந்த யுனெஸ்கோ வல்லுனரால் எழுதப்பட்டு, மொழிபெயர்க்கப்பட்டது.

அடுத்த இதழ் அறிஞர் அண்ணாவின் படத்துடன், 'பங்குனி 69' எனத் மாதமிடப்பட்டு வெளியாகிற்று. இவ்விதழில் 'அதிசயக்கருவிகள்!' எனும் அறிமுகத்துடன் 'இலத்திரக் கணனிகள்' பற்றிய தொடர் கட்டுரை ஆரம்பமாகிற்று. இதை எழுதியவர் அப்போது நிறுவனத்தின் பௌதிகவியல் விரிவுரையாளராக இருந்தவரும், பின்னர் இங்கிலாந்திற்குச் சென்று சிறந்த பொறியியலாளரும் கலாநிதியுமாய் மிளிர்ந்து அண்மையில் காலமாகியவருமான க. நடேசலிங்கம் அவர்கள். இவ்விதழில் இடம்பெற்ற இலக்கியப் படைப்புக்களில் எனது சிறுகதையுமொன்று.

'எழில்' கூட்டமைப்பிற்கு இருந்த சமூகப் பிரக்ஞையும், அப்போது பலருக்கு அந்நியமாய்ப்பட்ட அரசியல் நிலைப்பாடும், இரண்டாவது இதழிலிருந்து வெளிப்பட்டன. இவ்விதழின் ஆசிரியத்தலையங்கம், 'மாபெரும் அபாயம்' என்ற பெயரில், மலையகத்தமிழர் குடியுரிமை இழப்பது பற்றி மாவை நித்தியானந்தனால் எழுதப்பட்டது.

மூன்றாவது இதழ், இடையில் வந்த விடுமுறை காரணமாக, ஜூனில் தான் வெளியாயிற்று. எல்லோரும் ஊருக்குப் போயிருந்தோம். கூட்டமைப்பில் ஜெயநாதன் ஒருவர் மட்டும் மட்டக்களப்பு. மற்றைய யாவரும் யாழ்ப்பாணம். இவ்வேளையில் யாழ்ப்பாணம் வந்திருந்த சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்களை, நானும் இன்னொரு நண்பருமாய் (இப்போது யாரென நினைவில்லை) வல்வெட்டித்துறையில் போய்ப் பேட்டி கண்டோம். இப்பேட்டி மூன்றாவது இதழில் வந்தது. அத்துடன் வேறிரு பேட்டிகளும் சேர்ந்து அதனைப் பேட்டி மலராகவே ஆக்கிவிட்டன. அப்பேட்டிகளில் ஒன்று டி.கே.எஸ். சகோதரர்களிலொருவரான டி.கே. பகவதியினுடையது. இவரை மாவை பேட்டி கண்டார். மூன்றாவது பேட்டி தமிழ்வாணனுடையது. தமிழ்வாணன் இங்கு வந்திருந்தபோது வெளியிட்ட சில கருத்துக்களால் சர்ச்சைகளை உருவாக்கியிருந்தார். எனவே அவரைச் சந்திப்பதிலும் ஆர்வமாக இருந்தோம். இப்பொறுப்பும் எனக்கும் இன்னொரு நண்பருக்கும் (யார்?) தரப்பட்டது.

இவ்விதழின் தலையங்கம் அவ்வேளையில் பரவலாக இடம் பெற்ற சாதிக் கலவரங்களைக் கண்டித்து எழுதப்பட்டது. அட்டைப்படத்திற்கென ஜெயநாதன் ஒரு புகைப்படத்தைக் கொண்டுவந்திருந்தார். நிறையப்படகுகள் படகிலும் கரையிலுமாய் நிறைய மனிதர்கள். என்ன தலைப்பு கொடுக்கலாம் என ஆலோசித்த போது, பாரதிதாசனின் வரிகளான 'வெள்ளம் போல் தமிழர் கூட்டம்' என்பதனை முன்வைத்தேன். ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு இதழ் 'அட்டகாசமாக' வெளியாயிற்று.

நாலாவது இதழ் ஜுலையிலேயே வெளியாகிவிட்டது. கணினி தொடர்கட்டுரை, ருஷ்யச் சிறுகதை மொழிபெயர்ப்பு இவற்றுடன், அப்போது உலகெங்கும் அலைந்து கொண்டிருந்த 'ஹிப்பி' களைப் பேட்டி கண்டு செல்வராசா தர்மபாலா எழுதிய கட்டுரையும். 'நாவலரும் மலையகமும்' என்ற பெயரில் மலையகத்தமிழரின் கல்வி நிலை பற்றிய ஆசிரியத்தலையங்கமும் இவ்விதழில் இருந்தன.

ஐந்தாவது இதழ், நவம்பரில் தான் வெளியாயிற்று. மகாத்மா காந்தியின் நூற்றாண்டு விழாவினையொட்டி அவரின் படத்தை அட்டையில் தாங்கி அவ்விதழ் வந்தது. வழமையான அம்சங்களின் தொடர்ச்சியுடன், என்னைக் கதாநாயகனாகக் கற்பித்து மாவை எழுதிய சிறுகதையும் இவ்விதழில் வெளியாகியிருந்தது. இவ்விதழே 'எழில்' இதழின் கடைசி இதழாகவும் ஆக நேரிட்டது. அவரவர் படிப்பும், பிரச்சினைகளும், சூழலுமாய் அதற்கு மேல் எம்மைத் தொடரவிடவில்லை. (ஆனால், பின்னர் எழில் கூட்டமைப்பின் சம்மதத்துடன் குருநகர்/பாசையூரிலிருந்து ஒரு நண்பர் பெயர், யேசுதாசனாக இருக்கலாம்; நினைவில்லை. 'எழி' லைப் பொறுப்பேற்று 2, 3 இதழ்களைக் கொண்டு வந்தார். பிறகு அதுவும் நின்று விட்டது.)

'எழில்' ஓராண்டு காலமே வந்ததெனினும் அது எமக்களித்த அநுபவங்கள் செழுமையானவை. எதிர்காலத்திற்கான ஒரு பயில்களமாக அது எமக்கு அமைந்தது. இனிய நினைவுகளின் சேமிப்பாய் இன்றும் உள்ளது. அக்காலத்தைப் பற்றி எழுதுகையில் எனது ஆக்கமொன்றில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தேன்:

'தாய்மொழி வழிக்கல்வியாளருக்கு முன்பே புதிய மாக்ஸிய சிந்தனைகள்-சின்னச்சின்னக் கலந்துரையாடல்களும் கருத்தரங்குகளுமாய்-உருக்கொள்ள முனைந்த விடியற் காலம். கனவுகளும் திட்டங்களும் கருக்கொள்ள முயன்ற காலம். ('எழுதப்பட்ட அத்தியாயங்கள்')

கூட்டமைப்பைச் சேர்ந்த எல்லோருமே விடுதியிலோ அன்றி கட்டுபெத்தையிலும் அதன் அயற் பிரதேசங்களான அங்குலான, மோல்பே, இரத்மலான போன்றவற்றிலுமே வசித்தோம். ஆனால், பத்திரிகை அச்சிடப்பட்டது, ஆட்டுப்பட்டித்தெருவில். முதலிரு இதழ்களும் சுரேஷ் அச்சகத்திலும் அடுத்த மூன்றும் லட்சுமி அச்சகத்திலும் அச்சிடப்பெற்றன. இதனால் போக்குவரத்துப் பிரச்சினைகள் நிறைய இருந்தன. கொட்டாஞ்சேனையிலிருந்த எமது இன்னொரு நண்பர் ராஜேஸ்வரன், சுரேஷ் அச்சக உரிமையாளர்; அப்போது சட்ட மாணவராயிருந்த

ஒரு மலையகத்து நண்பர் - பெயர் ஞாபகமில்லை-மற்றும் லட்சுமி அச்சக சிவராமன் ஆகியோர் உதவியாயிருந்தனர்.

பத்திரிகை அச்சிடுவதன் பாரங்களான விற்பனை, சந்தா, விளம்பரம்-எம்முடையதும்; எமக்கும்-ஆகியவற்றின் அழுத்தலே எமது கற்றல் செயற்பாடுகளுக்கிடையில் பெரும் பிரச்சினைகளாக அமைந்தன. மாலையிலும், இரவிலும், வார இறுதியிலும் முறை வைத்து இவற்றைக் கவனித்தோம். பத்திரிகைக்கான 'போஸ்ரர்' ஒட்டுவது இரண்டு மூன்று தடவைகள் இரவில் செய்தோம். போஸ்ரர் கட்டும், பசைவாளியும் கையுமாய் நாலைந்து சைக்கிள்களில் மொறட்டுவையிலிருந்து கொட்டாஞ்சேனை ஈறாக-இரவுக் கடைகளில் அப்பமும் 'பிளேன் ரீ' யும் சாப்பிட்டு அலைந்ததும் அருமையான அநுபவம்.

பணத்தேவைகளைச் சமமாகப் பகிர்ந்து கொண்டோம்; பொறுப்புகளையும். எனினும் நித்தியும் இன்னும் ஓரிருவரும் கூடுதல் பாரங்களைச் சுமந்தவர்கள் என்பது நிச்சயம்.

இங்கே எழுதியவை யாவும் நினைவில் பதிந்தவையே. எழுபத்தைந்து வீதத்திற்கும் மேல் சரியாகத்தானிருக்கும். எனினும் எல்லாவற்றையும் சரிபார்த்துத் தருவது சாத்தியமுமில்லை. ஏனெனில், 'எழில் கூட்டமைப்' பிலிருந்தோரில் இப்போது எஞ்சி இலங்கையிலிருப்பவன் நான் ஒருவன் தான். மாவை நித்தி அவுஸ்திரேலியாவில்; மற்றையவர்களைப் பற்றி அதுவும் தெரியாது. என்றாலும், எப்போதோ எல்லோரும் சந்திக்க நேர்கையில்-சந்தித்தால் -இன்னும் முழுமையான பதிவுகள் அப்போது சாத்தியமாகலாம்.

ஆமாம். பெண்மொழி என்று ஒன்று இருக்கிறது. மழலை மொழி ஒன்று இருப்பதைபோல. பெரியவர்களின் மொழி என்றும் ஒன்று இருக்கிறது அல்லவா? அவர்கள் ஒரு சொல் சொன்னாலே போதும். ஆயிரம் அனுபவங்களில் தோய்ந்த ஒரே சொல்லாக இருக்கும். அதைப்போல பெண்ணுக்கென்று கண்டிப்பாக ஒரு மொழி இருக்கிறது. அவளுடைய இரசாயனம் வேறு. ஆணின் இரசாயனம் வேறு. மனித உடலின் இடப்பக்க இரசாயனம் வேறு வலப்பக்க இரசாயனம் வேறு. பெண்ணின் உடல் மாறுதல்கள் நிலவு மொழி என்றுகூட கூறப்படுகிறது. ஆணுக்கு சூரிய மொழி. பெண்ணின் விசனங்களை, இரசாயன மாற்றங்களை, அழகு உணர்வுகளை ஓர் ஆணால் அப்படியே எழுதமுடியாது.

பெண்ணிடம் கேட்டு அறிந்து சில ஆண்கள் கூறுகின்றனர். அது ஓர் அளவுக்கு தான் சரியாக இருக்கலாம். பெண்மொழி முழுக்கவும் தாயன்பு, சக்தி நிலை தொடர்புடையது. வீரியமாக, நளினமாக, நாணங்கலந்து அத்தனை வலிகளுடன் அவள் சொல்வதைப்போல ஓர் ஆணால் சொல்ல முடியாது. ஆனால் பெண்ணின் உயர்வுக்காக பாரதி போல ஒரு தோழமையுணர்வோடு, சக மனிதனாகப் பேசலாம்.

அப்படிப் பல ஆண்கள் பெண்களுக்காக எழுதியிருப்பதை மரியாதையுடன் ஏற்கிறேன். அதைபோல ஓர் ஆணுக்குள் பெண்மையும், பெண்ணுக்குள் ஆண்மையும் விழித்து எழும் நேரங்களும் உண்டு.

இரா. மீனாட்சி (கணையாழி நேர்காணல்)

தேநீர்

தேநீர்.....
கசப்புக்கும் இனிப்புக்கும்
கலப்புத் திருமணம்
.
உழைப்பாளிக்கு-
வியர்க்காத நேரத்து
வருமானம்.
சோம்பேறிக்கு
வியர்ப்பதற்காய் குடிக்கும்
குடிபானம்.
.
சிலருக்கு இது
சந்திப்பு நேரத்து
சம்பிரதாயம்.
குடித்துக்கொள்வதை விட
பிடித்துக்கொள்வது
நாகரிகம்.
.
மாடி வீட்டிற்கு
மேலேயுள்ள சிலருக்கும்
வறுமைக்கோட்டிற்கு
கீழேயுள்ள பலருக்கும்
ஒரு வேளைக்கு
உணவு

அவருக்கு
பசிப்பதற்காய்
இவருக்கு
பசித்ததற்காய்
.
நண்பா,
கண்ணீர் வந்தால்
காதலி மடி
கால்கள் துவண்டால்
கையில் தடி
தேவையேயில்லை
தேநீர் குடி
.
இதோ
கடைசிச் சொட்டுக்காய்
கையில் இருக்கிறது
அந்த
மலையுச்சி மனிதர்களின்
உழைப்பின் ஊறப்போட்ட
ஒரு கோப்பை
உற்சாகம்

கண்டிச் சீமையென்று
கனவோடு வந்தவர்கள்
ஏக்கத்தைத் தேக்கிவைத்த
ஒரு கோப்பை
ஏமாற்றம்

அடடா
நம் நாடு
ஏமாற்றத்தை
இறக்குமதி மட்டுமல்ல
ஏற்றுமதி கூடச் செய்கிறது
.
வெள்ளைக்காரன்
நம்
தோலின் நிறமென்று
சொல்லாமற் சொல்லி
பாலினைக் கலந்திதனை
பருகிக் கொண்டான்
.
தேநீர்
எம்போன்ற எத்தனையோ
எட்டாத நாடுகளின்
எழுத்துக்களைக் கூட
உலகத்தின் நாக்குகளின்
ஓட்டிவிட்டு வந்திருக்கும்?

அதனால் தான்
நன்றி கலந்த மரியாதையென்று
நக்கிக் குடித்து
நாசம் செய்யாமல்
முத்தமிட்டுக் குடிப்பதென்று
முடிவு செய்தோம்
.
என் தேநீர் நினைவுகளைத்
தேடிச் சேர்க்கிறேன்....

பாசத்தோடு பருக்கப்பட்டாலும்
பால்குடித்து மட்டுமே
பழக்கப்பட்டதால்
முழுசாய்க் குடிக்க
முயன்று தோற்ற
மூன்றாம் வயதின்
முதற் தேநீர்.
.
விளையாட்டு வேகத்தில்
மறந்து போனதால்
இலையான்கள் விழுந்து
இறந்து போனதாய்
ஆறிக் குடித்த
ஆறாம் வயதின்
அழுக்குத் தேநீர்
.
அதிகாலை அவஸ்தையில்
அம்மாவின் கைகளால்
பல் விளக்காமலொரு
படுக்கைத் தேநீர்
.
காதலி கைகளால்
கலக்கிக் கொடுத்ததால்
அதனை ருசிக்காமல்
அவளைக் குடித்ததால்
கவனிக்க மறந்த
காதல்த் தேநீர்
.
தொலைதூரப் பயணத்தால்
துவைக்கப்பட்டு
தரிப்பிடக் கடையில்
தள்ளாடி விழுந்து
உயிர்ப்புக்காய் உறிஞ்சிய
தெருவோரத் தேநீர்.
.
சீனியிற் சிலதுளி
சுடுநீர் கரைத்து
பாசத்தின் அளவிற்கு
பால்மாவைக் கொட்டி
நண்பன் தந்த
நகைச் சுவைத் தேநீர்
.
சீனியின் விலையைத்
தேநீரில் அறிந்து
தூரத்து உறவினரின்
துன்பத்தைப் புரிந்து
நொந்து போய்க் குடித்த
நீரிழிவுத் தேநீர்
.
இவையெல்லாம்
என் கடைசித் தேநீர்க்
காலம் வரைக்கும்
கடைவாயில் இனிக்கும்
கற்கண்டாய்க் கசக்கும்
.
தேநீர்
என் கவிதைக்காய் நாளைக்கும்
கட்டாயம் கிடைக்கும்.

சிறுகதை

உயிர்த்திருத்தல்

~ ச. சாரங்கா ~

'தடால்' என்ற ஓசை கேட்டது சமைய லறையினுள்ளிருந்து தான். அவனுக்குத் தெளிவாகவே புரிந்து போயிற்று அங்கே நின்று கொண்டிருப்பது யாரென்று. சடுதி யான கோபம் கிளர்ந்து அவன் உடல் எங்கும் பரவிற்று. ஒருவித இயலாமை அக்கோபத்தினுள் அடங்கியிருப்பதைப் புரிந்து கொண்டோ என்னமோ தன்னு டலில் ஒருவித பதட்டமும் நடுக்கமும் தொற்றியிருந்ததை உணர்ந்தான்.

எப்படியோ பூனை அவனை விஞ்சிய சக்தியுடன் தான் வாழ்ந்து வருவதாகத் தோன்றிற்று அந்த நினைப்பினால் எழுந்த கேவல உணர்வு அவனைக் கூனிக்குறுக வைத்தது. நீண்ட தடியொன்றை எடுத்து அதனைப் பூனைமீது பயன்படுத்தத் தக்க தருணத்தை மிகவும் ஆவலோடு எதிர்பார்த்து அவ் எதிர்பார்ப்பின் தோல்வியில் தான் இத்தீர்மானத்திற்கு வந்திருந்தான்.

அந்தச் சுற்றுவட்டாரத்தில் பூனைகள் தாமாகத் தோன்றவில்லை. அந்த ஈரறை வீட்டின் அமைதியைக் குலைக்கும்படி பெருகிய எலிகளைக் கட்டுப்படுத்த வேண்டி உயிரியல் எதிரியாகப் பூனையைக் கொண்டு வந்தாள் பாட்டி. அந்த நாள் இவனுக்கு இப்போதும் நல்ல நினைப்பிருக்கிறது.

'மியாவ்' என்றது பூனை

இவன் சற்றே விரிந்த கண்களுடன் ''பாட்டி'' என்றான்.

'பூனையா? நான் தான் கொண்டு வந்தனான்'

'ஏன்'

'எலித்தொல்லை இனியும் பொறுக்கேலாது . எதற்கும் ஒரு அளவிருக்கு'

'பாஷணம் வைச்சா... செத்திடும் இல்லையா?'

"ச்சே... பாஷணம் வைச்சால் வருந்திச், சாகும். பூனை எண்டா 'லபக்' எண்டு விழுங்கும். வேதனை இல்லாத சாவு." பாட்டி புதிய தர்மோபதேசம் செய்தாள். வலிக்காது இறத்தல் நல்லது தான்.

அந்தக் கொடூர இயல்பு காவிய பூனையை நேசிப்பதிலான கிறுக்கல்களை அவனுக்குத் தவிர்க்க முடியவில்லை. ஆனால் அந்தப் பூனை உண்மையில்

கொடியதில்லை எனத் தன்னைத்தானே நிறுவிக் கொண்டது. அதை சாமிப்பூ னை என்றழைக்கலாமா என்று கூடத் தோன்றிற்று. பாட்டி வைக்கின்ற உணவை அமைதியாகத் தின்றுவிட்டு ஒதுக்கமாக வாழ்ந்து வந்தது பூனை. சிறிது நாட்கள் செல்லத் தானாகத் தேடியுண்ணுதலிலும் அது கவர்ச்சியுற்றது. அதைத் தட்டுமுட்டுச் சாமான் நிறைந்த எலிகள் அடிக்கடி கும்மாளமடிக்கும் அறையினுள் விட்டு ஒருமுறை பூட்டினாள் பாட்டி. இரவினைப் பெட்டிகள் உருட்டும் ஓசை நிறைந்தது. அந்த இரவில் திருப்தி ஒளி சுடரும் முகத்தோடு பாட்டி வலம் வந்தபோதும் கூட காலையில் அந்தச் சத்தங்களெல்லாம் பூனை அறையைவிட்டு வெளியேற எடுத்த பிரயத்தனங்கள் மட்டுமேயன்றி வேறில்லை எனக்கண்டுகொண்ட போது ஏமாற்றம் அவளை ஒருவித விரக்தியுள் தள்ளிற்று, எனினும் மிகையில்லை.

சில காலங்களின் பின் பூனை அடிக்கடி காணாமல் போனது, போவது வருவது தெரியவில்லை. ஆனால் பாட்டி சொன்ன சொல்லக்கூடாத வார்த்தைகள் கருதுமிடத்து அதன் வயது பாட்டியைக் குறுக்குத்தனமாக யோசிக்க வைத்ததென்றே அவன் நம்பினான். சில நாட்களின் பின் சற்றே வயிற்றைத் தள்ளி நடந்தது பூனை. பாட்டியின் எதிர்வு கூறலைத் தன் மனதுள் வியந்தான் எனினும் அவன் அதை வெளிப்படையாகச் சொல்லவி ல்லை. அழகிய பளிங்கு போல் ஒளிரும் விழிகள், உடல் முழுதும் செழுமை யும்அழகும் சமவிகிதக் கலப்பில் மினுமினுக்கும் அழகு. தற்செயலாக ஒரு நாள் அதன் மேனி தொட்டபோதான அனுபவம் இன்னும் அவனுள் மென்மையாய்த் தங்கியிருந்தது.

எவ்வாறு இருந்தால் என்ன பூனையை அவனால் ஏற்றுக் கொள்ள முடியாதிருந்தது.

''பிள்ளைகள் பெற்றதப் பூனை - அவை பேருக்கொரு நிறமாகும்''

பாரதி வீட்டில் வளர்ந்த பூனை இவ்விதம் கஷ்டம் கொடுத்திருக்காதா? பாரதியின் உயிரொன்றிய நேசிப்பின் வசப்பட்டு யுகங்கள் கடந்தும் தன் ஜீவிதத்தை உறுதிகொண்டிருக்கிறது அந்தப் பூனை. அவனது வீட்டுப்பூனை யும் பிள்ளைகள் பெற்றது. ஆனால் பிள்ளைகள் ஒவ்வொன்றும் இயல்பாகவே திருட்டுத்தனம் கைவரப்பெற்றனவாயிருந்தன. அவற்றின் துடுக்குத்தனங்க ளும் சாகஸங்களும் மின்னல் வேகத்திலான கைவரிசைகளும் ஆற்றல்களின் உச்சங்களில் ஒளிர்ந்த போதிலும் அவனால் அவற்றை ரசிக்க முடியாதிருந் தது. பூனைகளினாலான தொந்தரவு இப்போது அவனது வாழ்விலேயே ஒருவித விரக்தியை ஆக்கியிருந்தது.

கண்ணம்மா ஒரு பூனையை வளர்த்து வந்தாளென்றும் அப்பூனையானது எலியொன்றைப் பிடித்து உடனடியாகக் கொல்லாது விளையாடித் துன்புறு த்தியதென்றும் பின்னர் அப்பூனைக்குத் தக்கதொரு தண்டனையை நாய்

வழங்கியதாகவும் இவன் சின்னஞ்சிறு வயதில் படித்த கதை ஒருநாள் அமைதியான வெளிப்பகன்ற இருள் திரண்ட இரவுக்கனவில் வந்தது. ஆக, வல்லவர்களுக்கு வல்லவர்கள் வந்தே தீருவார்கள் என்ற அடிப்படைத் தத்துவமானது அவன் மனதில் சிறிது பாலை வார்த்தது. மறுநாள் எழுந்தபோது நாய்களில் காரணமறியாத பிரேமை கிளர்ந்திருப்பதை அவன் கண்டான். ஆனால் எந்த நாயும் அவன் வீட்டுப் பூனையைத் திகிலூட்டத் துணியவில்லை என்பதையும் நாய்களைப் பூனை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை என்பதையும் அறிந்தபோது மிகுந்த ஏமாற்றமுற்றான்.

'சிலீர்' என்ற கண்ணாடி நொருங்கும் ஓசை மீண்டும் எழுந்தது.

'என்னப்பா போய்ப் பாருங்கோவன்'

அருகில் படுத்திருந்த மனைவியின் குரல் கிசுகிசுப்பாய் ஒலித்தது. அந்த அருமையான தூக்கத்தைக் கெடுத்த பூனைமீது ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. எழுந்தபோதே ஒரு நீண்ட தடியை எடுத்துக் கொண்டான். நன்றாக வாசலை அடைக்கும்படி நின்றுகொள்ளப் போகின்றான் அவன். பிறகு தடியைத் தூக்கி... தூக்கி என்ன செய்வது? தலைமீது ஒரே போடு. செத்துவிழட்டும் பூனை. கோபமுற்ற அவன் மனம் கொலைகாரனாய்க் கறுவி ற்று. மறுகணமே குற்றத்திற்கு அதிகமான தண்டனையோ என மனஞ்சோர்ந்தான். பிறகு அதன் கால்களைத் தாக்கிக் காயப்படுத்தச் சித்தங்கொண்டான். அவனது நினைவுலகம் முழுதும் நிரம்பி வழிந்தது பூனை.

பதுங்கிப்பதுங்கி சமையலறைக்கு வந்தபோது பூனையைத் தன்னெதிர் எதிரியாகக் கொண்ட பேதைமையை யாராவது அறிந்து கொண்டார்களோ என்ற பயத்துடன் அவனது விழிகள் அலைபாய்ந்தன. மங்கிய மென்னொளியில் பூனை அமர்ந்திருந்தது. மெல்லத்தடி ஓங்கிய பொழுதில் சடுதியாகத் திரும்பிற்று அது. இவன் எதிர்பாராத வேகத்தில் எதிர்பாராத திசையில் பாய்ந்தோடி இவனது கண்களுக்கு வெறுமையைப் பரிசாக்கிற்று. அந்த வெறுமையை ஏமாற்றமாகத் தன்மனதில் விரித்தான் அவன்.

'சனியன்... தப்பீட்டுது...'

அந்தத் தடிக்குப் பதிலாகக் கூரிய ஆயுதம் தன்கைவசப் பட்டிருத்தலையும் அதனால் அப்பூனையைத் தாக்கி வெற்றி கொள்வதையும் கொண்ட நிழல் தோற்றத்தை மனதில் எழுப்பி அதனால் ஒருவித திருப்தி கொண்டான் அவன். அனால் மறுநாள் அத்திருப்தியை அவனாகவே தொலைத்தான்.

'என்னப்பா... பூனை நினைப்பா...?'

கலீரெனச் சிரித்த மனைவியின் முகத்தில் ஒரு கேலியின் இழை நிரந்தரப்பட்டிருத்தலை அவன் கண்டான்.

'என்னை நினையுங்கோ...'

அவளது மென்சிணுக்கத்தை ரசிக்கும் நிலையில் அவன் இல்லை. ஒரு பெரிய போரில் தோற்றதாகவே அவன் உணர்ந்தான்.

அந்தப்பூனையின் எதிர்காலம் எதிர்பாராத விதமாக முடிவுக்கு வந்தது இருநாட்களின் பிறகு. மீண்டும் சற்றே வயிறுப்பியிருந்த பூனையின் கால் பொறியில் சிக்கியிருந்தது. அவனுள் இருந்த கோபாவேசமும் வஞ்சகமும் இணைந்துயர்ந்த பொழுதில் மீனைப்பொறியிரையாக வைத்திருந்தான். பூனை மாட்டிப்போயிருந்தது. ஒரு சிறு பையினுள் இட்டுக் கட்டியாகி விட்டது. நாய் பிடிக்கும் தொழிலாளர்களிடம் அதைக் கையளித்தான்.

'இதையும் முடிச்சிடுங்கோ...'

அவர்கள் அதைக் கூண்டினுள் கொட்டிய பிறகு தான் பூனை என உணர்ந்து சற்றே வியப்பாய் பார்த்தார்கள். இவன் கண்களில் கெஞ்சலுடன் அவர்களில் ஒருவனது கையில் கொஞ்சம் பணத்தை அழுத்தினான்.

'பூனைத்தொல்லை பொறுக்கேலாது. எதுக்கும் ஒரு அளவிருக்கு'

இந்த வார்த்தைகளைச் சொன்ன பொழுதில் முன்பொரு நாள் கேட்டது நினைவில் வந்தது. அது எலித்தொல்லை பற்றியிருந்தது. காலமானது தொல்லைகளை மாற்றுவதில் கெட்டித்தனம் உடையதெனும் முடிவுக்கு அவன் வந்தான்.

'முடிச்சிடுங்கோ...'

மீண்டும் சொன்னான். கூண்டினுள் பூனை பல நாய்களின் இடையில் தனித்து ஒதுங்கி நின்றது. இவன் பார்த்த பொழுதில் பூனையின் விழிகளைச் சந்தித்தான். ஏதும் செய்யமுடியாத இக்கட்டின் தவிப்பு நிரம்பிய கண்கள். ஒருகணம் தான் அப்பார்வையை வலிந்து விலக்கிக் கொண்டான்.

''முடிஞ்சதா... நினைச்சிடுங்கோ.''

பணத்தை வாங்கிக் கொண்டவன் காவிப்பற்களாலான சிரிப்பைச் சந்தோசமாய்ச் சிந்தினான். நாய்க்கூண்டு வண்டி நகர்ந்து விட்டது. பூனையை ஜெயித்துவிட்டதாகத் தோன்றியது. ஆனால் சொல்லவியலாத ஒருவித கனதியை அன்றி திருப்தியை அவனால் உணர முடியவில்லை. ஆனாலும் மனைவியின் முகத்திலான கேலியின் இழையை இனிமேல் அவன் காணவேண்டியதில்லை.

❖ ❖ ❖

இரவு 'மியாவ்' என்றது பூனை. மனம் சிலிர்த்துக் கொண்டது. பூனை கத்தும் சத்தம் அவனது காதுகளைச் சம்மட்டியால் அறைந்தது. தலையைக் குலுக்கிக் கொண்டான். ஆனால் நினைவுகள் குலுங்காமல் தெள்ளத் தெளிவாய் ஆகி இவன் செய்துவிட்ட கொடுமையைப் பறை சாற்றின.

'பூனை... பூனை...'

இவன் தன்னுணர்வின்றி உச்சரித்தான்.

'என்னப்பா பூனை தான் செத்துப் போட்டுதே...'

மனைவி நித்திரைக் குழப்பத்தோடு முணுமுணுத்துத் திரும்பிப்படுத்தாள்.

'இல்லை... அது சாகேல்லை...'

நாய்க்கூண்டின் ஓரத்தில் ஒதுங்கி நின்று அந்தப் பூனை இறுதியாகப் பார்த்த பார்வை அவனது நெஞ்சில் தங்கி வருத்திற்று அப்பார்வையின் தவிப்பு முள்ளாய் உறுத்திற்று.

பூனையின் உப்பிய வயிறு மனக்கண்ணில் எழுந்தது. இவனது இளம் மனைவி தாய்மையுறுகையில் கூட பூனையின் நினைப்பெழுந்து வருந்த வைக்குமே என அஞ்சினான். மனைவியின் மிருதுவான கரங்கள் கூட இலகுவாகப் பூனையின் மென்மையை மீட்டுவிடுவதில் அவளை மெல்ல விலக்கி உட் கார்ந்தான். மெல்ல எழுந்து வெளியில் நடந்தான். நட்சத்திரப்பூக்களைத் தூவியிருந்தது வானம். அவற்றை உற்றுப்பார்த்தான் அவற்றில் கூட மறைந்து கிடக்கும் ஒரு வயிறுப்பிய பூனையின் தோற்றத்தையே அவன் கண்டான். மாணவப் பருவத்தில் 'பெருங்கரடி'' யைக் கண்டுபிடிக்க முடியாத அவனின் கண்கள் பூனையின் உருவை நட்சத்திரங்களுள் காண்பதில் சிரமப்பா டாதிருப்பதற்காகத் தன்னையே வியந்தான்.

விழிகளை வான்வெளியிலிருந்து பிரித்தெடுத்து நிலவொளி ஆக்கிய மரநிழல் அசைவுகளை நோக்கினான். அந்த அசைவுகள் கூட பூனையின் சாகசங்களை அவனுக்கு நினைப்பூட்டிற்று. தன் வயிற்றுள் குழந்தைகளைக் காவியிருந்த போது அப்பூனை எத்தனை வசந்தக் கனவுகளைக் கண்டிருக்கும். அனைத்தையும் நொருக்கி அதைச் சாக்களத்திற்கு அனுப்பி விட்டான் அவன். இனி அவனால் அதைக் காப்பாற்ற முடியாது. நீரில் மூழ்கி மூச்சுத் திணறி இறந்திருக்கும் அது. ஆனால் இவனுள் மட்டும் உயிர்த்திருக்கிறது மனிதம் உயிர்க்கின்ற பொழுதுகளுக்கப்பால் பழிவாங்கற் திருப்திகளை சந்தோசமாகத் துய்க்க முடியாதெனும் தீர்மானத்தை அவன் கன்னத்தில் வழிகின்ற கண்ணீர் எழுதிற்று. வேகமாய் அறையினுள் புகுந்து கவிதையெழுதும் குறிப்புப் புத்தகத்தை எடுத்துக் கொண்டான். கை 'பூனை' என்று தலைப்பிட்டது.

இலக்கிய நெஞ்சங்களே,

உங்கள் பிரதேசத்திலோ அல்லது பாடசாலையிலோ 'திசை புதிது' இதழ்களை விநியோகிக்க விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

வியாபாரிகளுக்கு கழிவு வழங்கப்படும்



சந்திப்பு

கவிஞர் சோ.ப.

கவிஞர் சோ.பத்மநாதன் மரபு வழி நின்று கவிதை தருபவர். கவிதைகளில் பேச்சோசைப் பண்பைச் சிறப்பாகப் பயன்படுத்துபவர். பேச்சோசையுடன் பொருளுக்கேற்பத் தரித்து வாசிப்பதால் கவியரங்குகளிற் பிரகாசிப்பவர்.

ஈழத்தில் தொடர்ந்து இயங்கிவரும் மொழி பெயர்ப்பாளர்களுள் ஒருவரான சோ.ப கவிதைகள், சிறுகதைகளைப் பிறமொழிகளிலிருந்து ஆங்கிலத்தூடாகத் தமிழுக்கும் தமிழ்ப் படைப்புக்களை ஆங்கிலத்திற்கும் மொழி பெயர்ந்து வருகிறார். இவரது 'ஆபிரிக்கக் கவிதைகள்' மொழிபெயர்ப்புத் தொகுதிக்கு 2001ம் ஆண்டுக்கான சாகித்திய விருது கிடைத்துள்ளது.

காவடிச் சிந்து(இசைப்பாடல்), வடக்கிருத்தல் (கவிதைத் தொகுதி), ஆபிரிக்கக் கவிதைகள் (மொழி பெயர்ப்பு) ஆகியவற்றைத் தந்திருக்கும் சோ.ப நாடகம், சொற்பொழிவுத் துறைகளிலும் பங்காற்றியுள்ளார்.

நேர்கண்டவர்-தி.செல்வமனோகரன்.

முதலில் உங்கள் குடும்பம், கல்வி, தொழில் என்பன பற்றிக் கூறுங்கள்.

பெற்றோர் சோமசுந்தரம் பிள்ளை - மாணிக்கம். 14.09.1939 இல் பிறந்தேன். பிறந்த இடம் சிப்பித்தறை இது கோம்பையன் மணல் சுடலைக்கு மேற்காகவும் ஆறுகால் மடத்திற்குக்கிழக்காகவும் கொக்குவிலுக்குத் தெற்காகவும் அமைந்துள்ளது.

மூன்றாம் வகுப்புவரை சிறீ வைத்திலிங்க வித்தியாசாலையிலும் பின்னர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிலும் கல்வி கற்றேன். மனைவி சிவசோதி, பிள்ளைகள் நால்வர்- இளங்கோ, ஆரூரன், செந்தூரன், அபர்ணா.

தபால்-தந்திப் பகுதியில் தொழில்புரிய ஆரம்பித்தேன். பிறகு எழுதுவினைஞராக ஆறு ஆண்டுகள். பின்னர் பதினெட்டு ஆண்டுகள் ஆசிரியத் தொழிலிலும் பதிமூன்று ஆண்டுகள் ஆங்கில விரிவுரையாளராகவும் கடமையாற்றினேன். அதன் பின் மூன்றாண்டுகள் பலாலி ஆசிரிய கலாசாலை அதிபராயிருந்தேன்.

உங்கள் இலக்கிய நாட்டத்திற்கு, எழுத்துலகப் பிரவேசத்திற்கு பின்னணி என்ன?

மிகச் சிறிய வயதிலிருந்து கேட்ட வாரியார் பேருரைகள்; குருநாதர் வித்துவான் கார்த்திகேயனுடைய சகவாசம் - அவர் தந்த ஊக்கம் என்பன பின்னணியாக இருந்தன.

அக்காலத்தில் இந்துக் கல்லூரியில் திருக்கூட்டம் ஒன்று இருந்தது. வித்துவான் கார்த்திகேயன், பண்டிதர் செல்லத்துரை, வை. ஏரம்பமூர்த்தி, க.சிவராமலிங்கம் என தமிழறிஞர் ஒரு வரிசை கொம்யூனிஸ்ற் கார்த்திகேசன், அ.வைத்திலிங்கம், ஏ.எஸ். கனகரத்தினம், அற்புதரத்தினம் முதலிய இடதுசாரிகள் வரிசை மற்றொன்று, அதிபர் ஆசைப்பிள்ளை, சீ.சபாரத்தினம், வி.ராமகிருஷ்ணன், P.S.குமாரசாமி. வி.மகாதேவன் என்ற துறைசார் நிபுணர்கள் வரிசை பிறிதொன்று, இந்த ஆளுமைக ளோடு 'உரசி' உருவாகியதே என் ஆளுமை.

உங்கள் முதற் படைப்பு முயற்சி ஞாபகமிருக்கிறதா?

பதினான்கு வயதில் ஏதேதோ கிறுக்கிப் பார்த்த ஞாபகம். பதினாறு வயதில் கல்லூரிச் சஞ்சிகைக்கு எழுதிய "யாழ்ப்பாணம்" முதற் கவிதை எனலாம்.

நவரத்தினசாமி பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த போது எனக்கு வயது பதினாறு. ஒவ்வொரு தமிழனும் நெஞ்சை நிமிர்த்தி உலாவிய காலம் அது. அந்தச் சாதனை பற்றி நான் எழுதிய கவிதை வரதர் ஆசிரியராகவும், புதுமைலோலன் இணையாசிரியராகவும் இருந்து நடத்திய ஆனந்தன் முதற்பக்கத்தில். வெளியா யிற்று

பிறகென்ன,. என் கவிதைத் தேர்
"சீர், தளை மோனையால் சிறந்த
ஓர் தனிச் செய்யுளாய்" உருளலாயிற்று.

உங்கள் கவியுலக யாத்திரையில் ஆதர்சமாக யாரைக் கொள்கின்றீர்கள்?

கவி புனையும் எல்லோருக்கும் பாரதி ஒரு பெரிய உந்து சக்தி. இது பொது. ஈழத்தவனாகிய எனக்கு, மஹாகவி ஆதர்ச நாயகன்.

நீங்கள் மரபுவழி நின்று கவிதை தருபவர். புதுக் கவிதை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

யாப்பு விதிக்கும் கட்டுப்பாடுகளை மீறி, கருத்துக்கு - செய்திக்கு - முதன்மை தருவது புதுக்கவிதை. 'verse libre' அல்லது விடுதலை பெற்ற கவிதை என்று பிரெஞ்சிலும் 'free verse' என்று ஆங்கிலத்திலும் 'திகம்பர கவி' என்று தெலுங்கிலும் 'நிசந்தஸ்' என்று சிங்களத்திலும் இது வழங்குகின்றது. யாப்பின் தளைகளி. ருந்து விடுபடுதல் என்பதை இப் பெயர்கள் குறிக்கின்றன.

மரபுக்கவிதை மிக மோசமான சொல்லடுக்குகள் கொண்டு இயற்றப்ப டுவது போல, சொற் சிலம்பமாடும் புதுக்கவிதைகள் ஏராளம். இசைவாணன் ஒருவன் என்ன பாடினாலும், ஏழு சுரங்கள் (ஐந்து வரை குறையலாம்) என்ற எல்லைக்குள் நிற்பது போல, கவிதையும் ஓசை, லயம் என்ற எல்லைகளுக்குள் நின்று இன்பம் தருவது.

'சுவை புதிது, சொல் புதிது' ஆக வரும் நவ கவிதையை வரவேற்கும் அதே வேளையில், எமக்குரியதான நீண்ட கவிதை மரபின் அநுகூலங்களை நிராகரிக்க மனம் ஒருப்படவில்லை.

திருப்புகழ் சந்தத்தைக் கையாள்வது கடினமெனப் பண்டிதர்களே கூறுகிறார் கள். நீங்கள் திருப்புகழ்ச் சந்தத்தில் பாடியுள்ளீர்கள். அது சிரமமாயில்லையா?

திருப்புகழை 'லயமாலிகை' என்பேன் அருணகிரியின் சாதனை மிகப்பெரியது. ஓசை நுணுக்கத்தில் அக்கறை உள்ளவர்கள் திருப்புகழைப் பயில வேண்டும். திருப் புகழ் கடினமானது என்ற எண்ணம் பதிந்து விட்டது. திருப்புகழில் எளிமை யான பாடல்கள் இருப்பதைப் பலர் மறந்து விடுகிறார்ள்.

"காலன் எனையணு காமல் உனதிரு
காலில் வழிபட அருள்வாயே!"
"தொந்தி சரிய, மயிரே வெளிற, நிரை
தந்த மசைய முதுகே வளைய இதழ்
தொங்க ஒருகை தடிமேல் வர மகளிர் நகையாடி
'தொண்டு கிழவன் இவர் ஆர்?' என"

இதில் என்ன கஷ்டம்?

என்னைப் பொறுத்த வரையில் எல்லாப் பா வடிவங்களையும் - சந்தர்ப்பங்க ளுக் கேற்ப - பயன்படுத்தும் ஆர்வம் உண்டு. திருப்புகழ், காவடிச்சிந்து என்பன எனக்கு மிக உவப்பானவை.

வெவ்வேறு காலப் பகுதிகளில் நீங்கள் விரும்பிப் படித்த, படிக்கின்ற பழந்தமிழிலக்கியங்கள் ஈழத்து, தமிழகத்துத் தமிழ்க் கவிஞர்கள் பற்றி.

பழந்தமிழிலக்கியங்களில் சிலப்பதிகாரம், திவ்விய பிரபந்தம், முத்தொள் ளாயிரம், நந்திக் கலம்பகம், அருட்பா போன்றவற்றைக் கூறலாம்.

நவீன கவிஞர்களில் பாரதி, பாரதிதாசன், ச.து.சு.யோகியார், மேத்தா, வைரமுத்து, மஹாகவி, நீலாவணன், முருகையன், புதுவை, சேரன், ஜெயபாலன், அஸ்வகோஷ், நட்சத்திரன் செவ்விந்தியன், வில்வரத்தினம் .... என பட்டியல் நீளும்.

புதிய தலைமுறையினரில் உங்களுக்கு நம்பிக்கையளிப்பவர்கள் யார்?

இங்கிருக்கும் இளங்கவிஞர்களில் ஜெயசீலன், சிவசிதம்பரம், முகுந்தன், கருணாகரன் எனச் சிலரைக் குறிப்பிடலாம்.

கவியரங்குகள் பற்றி

கவிதை நீண்ட நெடுங்காலமாகச் 'செவிநுகர்கனி' யாகவே இருந்து வந்துள்ளது. இன்று அது கட்புலமாகி விட்டது என்று சொல்வதை நான் ஏற்பதில்லை. கவிஞனால் மக்களோடு தொடர்பு கொள்ள முடியும். எடுத்துரைப்பு முறையால் கவிதை கேட்போரை வசப்படுத்த வல்லது.

கவியரங்குகள் வெறும் சொல்லாடல்களாகவோ மட்டமான நகைச்சுவை நிகழ்ச்சிகளாகவோ மலினப்படக் கூடாது.

இன்றைய கவிதைகள் பல 'இருண்மையானவை' என்று கூறப்படுவது பற்றி.

இளங்கவிஞர்கள் படிமங்களை அடுக்கிக் கொண்டு போகிறார்கள். சாதாரண வாசகனுக்குப் புரியாத அளவுக்கு சில வேளைகளில் 'நொடி'யாகி விடுகிறது. கவிதை. பாரதி சொல்வாராம்: "தமிழைத் தவிர வேறெந்த மொழியும் தெரியாத நாலுபேரை இருத்தி, நீ எழுதியதை வாசித்துக் காட்டு. அவர்களுக்கும் புரிகிறதா என்று பார்!"

இன்னொன்று கவிஞர்களுக்கு இலக்கியப் பயிற்சி இல்லை. சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வரும்!.

கவிதைக்குரிய காலம் முடிந்து விட்டது என்று கூடக் குரல்கள் எழுகின்றனவே.

யார் சொன்னது? உயிர்க் கனவை ஏந்தும் கலையுள்ளம் படைத்த ஒரு ஜீவன் இருக்கும் வரை கவிதை வாழும். படித்தவர்கள் இல்லாது போனாலும் கவிஞர்கள் இருப்பார்கள். தாலாட்டும் ஒப்பாரியும் என்று பழசாய்ப் போகும்?

கவிதையின் ஆரம்பப் படிநிலைகளில் நிற்போர் கூட உடனேயே தொகுப்பு வெளியிடுகிறார்கள். நீண்டகாலமாக எழுதிக் கொண்டிருக்கும் நீங்கள் இப்போது தான் நூலாக்க முயற்சியில் ஈடுபட்டுள்ளீர்கள் காரணமென்ன?

ஆரம்ப எழுத்தாளர்கள் அவசரப்பட்டு நூல் வெளியிடக் கூடாது என்பது என் கருத்து. அதற்காக என்னைப் போல் முப்பது ஆண்டுகள் காத்திருக்க வேண்டும் என்பதில்லை. என் தாமதத்திற்குக் காரணம் தனிப்பட்ட பிரச்சினைகளே.

கவிதை நாட்டம் கொண்டே நீங்கள் பிற நவீன இலக்கிய வடிவங்களில் (சிறுகதை, நாடகம்...) படைப்பு முயற்சி மேற்கொண்டதுண்டா?

நாடகங்கள் ஒரு சில எழுதியதுண்டு. அவை மேடையேறியுமுள்ளன, நிறையப் புனைகதைகள் படிப்பேன். ஆனால் ஏனோ எழுத முயன்றதில்லை.

"என் முழுப்பொழுதும் வாளாய் விழிக்கொண்டவள் ஒருத்திக்கு வழங்கிட்டேன்" அவள் தான் கவிதையாம் காதலி.

பிறமொழிக் கவிதைகளைத் தமிழுக்குக் கொண்டுவரும் முயற்சியில் ஈழத்தில் எம்.ஏ.நுஃமான், சி.சிவசேகரம், அ.யேசுராசா, முருகையன், நீங்கள் என மிகச் சிலரே ஈடுபட்டுள்ளீர்கள். உங்கள் மொழிபெயர்ப்பு அனுபவங்களைக் கூறுங்கள்.

பன்மொழிப் புலமையுள்ள ஒரு தலைமுறை முன்பு இருந்தது. தமிழ், சமஸ்கிருதம், பாளி, லத்தீன், ஆங்கிலம், சிங்களம் - இவற்றில் மூன்று மொழிகளாவது தெரிந்திருந்தார்கள். அடுத்த தலைமுறைக்கு இருமொழி ஞானமே வாய்த்தது. இந்தக் தலைமுறைக்கு ஒரு மொழி மட்டுமே தெரியும். என்ன செய்யலாம்? மிகவும் வறுமைப்பட்டு விட்டோம்.

மேலதிகமாக ஒரு மொழி தெரியுமென்றால், அம்மொழி வாயிலாக, இன்னோர் இலக்கியத்தை - இன்னொரு பண்பாட்டை- அறிகிறோம் என்பது பொருள். எம் இலக்கிய அநுபவம் விரிவடைகிறது.

என் அநுபவம் பற்றிக் கேட்கிறீர்கள் ஆங்கிலம் வாயிலாக ஆபிரிக்கக் கவிதையைத் தரிசித்த போது சிலிர்ப்படைந்தேன் - எம் (தமிழ்) அனுபவமும் ஆபிரிக்க அநுபவமும் சமாந்தரமாக இருக்கக் கண்டு.

சிறுகதை மொழிபெயர்ப்பு அநுபவங்கள் பற்றி

ஆபிரிக்கச் சிறுதைகள் சிலவற்றை மொழிபெயர்த்துள்ளேன். அலன் பேற்றன், ஷினுவ அச்சேபே ஆகியோர் கதைகள் அவற்றுள் அடக்கம்.

உமா வரதராஜன், ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், அல் அஸுமத், திருக்கோயில் கவியுவன், ரஞ்சகுமார் ஆகியோரின் படைப்புக்கள் கனடாவிலும் இலங்கையிலும் வெளியிடப்பட்ட தொகுதிகளில் வந்துள்ளன. கோகிலா மகேந்திரன், செங்கை ஆழியான், செம்பியன் செல்வன் ஆகியோரின் கதைகள் விரைவில் அச்சேறவுள்ளன.

ஆங்கில ஆசிரியரான நீங்கள் ஆங்கில மொழிமூலக் கல்வி - தமிழ் மொழி மூலக்கல்வி பற்றி என்ன கருதுகிறீர்கள்?

தாய்மொழி மூலமே கல்வி போதிக்கப்பட வேண்டும். என்பது எனது உறுதியான கொள்கை. ஆங்கிலம் அறிவுலகத்திற்குச் சாளரம். அதனைச் சாத்தி

விடக் கூடாது. இந் நாட்டில் நாம் சிறுபான்மையினர். ஓர் உலகமொழி தெரிந்திருப்பது பெரிய அநுகூலம். சிங்களம் கற்பதற்கும் இனித் தடையிராதென நம்புகிறேன்.

ஆங்கில மொழி மூலக் கல்வியை அறிமுகப்படுத்தும் முயற்சி வெற்றியளிக்கும் என நம்புகிறீர்களா?

சில ஆண்டுகளுக்கு முன் சர்வதேசப் பாடசாலைகள் அறிமுக மாயின. வசதி படைத்தவர்களே பயன் பெற்றார்கள் ஆங்கில மூலக் கல்விக்கும் அது தான் நடக்கும். இளைஞர் பிரச்சினைகள் பற்றி ஆராய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன் சாட்சியமளித்த நாட்டுப்புறச் சிங்கள இளைஞர்கள் என்ன சொன்னார்கள் தெரியுமா? "ஆங்கிலம் எங்களை வீழ்த்தவே பயன்படுகிறது!" சிந்திக்க வேண்டிய கூற்று இது. பெரும்பான்மையானவர்கள் வஞ்சிக்கப்படும் ஒரு சமூக, பொருளாதார முறைமையில் எங்கோ தவறிருக்கிறது என்பதை அனுமானிக்கலாம்.

முற்போக்கு, நற்போக்கு, மெய்முதல்வாதம் போன்ற குழுச் செயற்பாடுகள் பற்றி

முற்போக்கு அணியினர் குறிப்பிடத்தக்க சாதனைகள் புரிந்துள்ளனர். எழுத்தாளர்களை வினைத்திறன் மிக்க அணியாகத் திரட்டிச் செயற்பட்ட வர்கள் அவர்கள். மற்றெந்தக் குழுவுக்கும் கிடைக்காத வாய்ப்புக்கள் அவர்களுக்கு கிடைத்தன. எழுத்தாளர்களும் அவர்களுக்கு வழிகாட்டும் - அங்கீகாரம் வழங்கும் - தத்துவாசிரி யர்களும் ஓரணியில் - ஓர் இயக்கமாக - திரண்டது ஈழத்து எழுத்துத்துறைக்கு வளம் சேர்த்தது.

இவ்வளவும் சொன்ன பிறகு, இதையும் சொல்லியாக வேண்டும். முற்போக்கு அணிக்கு வெளியேயும் தரமான படைப்பாளிகள் இருந்தனர். இலக்கிய வரலாற்றில் முற்போக்கு அணிவகித்த இடம் பற்றி அதன் தானைத் தலைவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். மற்றவர்கள் அல்லவா அதைச் செய்ய வேண்டும்?

புலம் பெயர் இலக்கியம் உலக அளவிற் பேசும்படியான படைப்புக்களைத் தரும் என்பது பற்றிய உங்கள் கருத்தென்ன?

சாத்தியப்பாடு நிச்சயம் உண்டு. இந் நாட்டின் ஒடுக்கு முறையால், போரால் வேர்களை அறுத்துக் கொண்டு போய் பரிச்சயமில்லாத சூழலில் எதிர் நீச்சலடிக்கும் ஒருவனுக்குச் சொல்ல நிறைய இருக்கும்.

ஈழத்தில் உலகத்தரம் வாய்ந்த படைப்பாளிகள் தோன்றவில்லை என்று எழுந்துள்ள கருத்துப்பற்றி

உலகத் தரம் என்பது உயர நிற்கிறது. இருந்த போதும் இப்போது வாழும் ஒரு சில படைப்பாளிகள் காலத்தை வென்று - உலகத்தரத்தைத் தொடுவார்கள் என்றே நம்புகிறேன்.

இயல்பாகவே ஒரு கவிஞராகிய நீங்கள் ஆசிரியராக நிர்வாகியாக, மொழி பெயர்ப்பாளராக, குடும்பத்தலைவராக, பொது வாழ்வில் நாட்டமுடையவராக பல தளங்களில் செயற்படுவதில் சிக்கல்கள், முரண்பாடுகள் உள்ளனவா?

முரண்பாடேதும் இல்லை, எந்தத் தளத்தில் நின்றாலும் நான் நானாகவே நிற்கிறேன். இள வயதில் சிறுமை கண்டு பொங்குவதுண்டு. இப்பொழுதெல்லாம் அது கூடக்குறைவு. "பிரபஞ்சத்தின் மையத்தில் நாம் இருப்பதாக நினைத்துத் துன்பப்படுகிறோம். உண்மை என்னவென்றால், மையத்தில் யாரும் இல்லை "என்று ராஜாதி ஒரு முறை சொன்னார். நல்லதும் கெட்டதும் கொண்டதே உலகம் என்ற ஞானத்தைக் காலம் எனக்குத் தந்துள்ளது. என்னால் மாநிலம் பயனுற வேண்டும் என்ற பேராசை உண்டு. விழித்திருக்கும் நேரமெல்லாம் பொதுப்பணியில் ஈடுபட்டிருப்பதற்கு இது காரணம்.

உங்களுக்கு கிடைத்த விருதுகள் பற்றி

1978 இல் இலங்கை வானொலியின் நாடகப் பிரதிப் போட்டியில் முதற்பரிசு. 1982 இல் மாவை முத்தமிழ் மன்றம் பாரதி நூற்றாண்டையொட்டி நடத்திய அகில இலங்கைக் கவிதைப் போட்டியில் முதற்பரிசு 1998 இல் 'வடக்கிருத்தல்' தொகுதிக்கு வடக்கு-கிழக்கு மாகாணப்பரிசு. 2001 இல் "ஆபிரிக்கக் கவிதை"க்கு இலங்கைக் கலைக் கழகமும் வடக்குக் கிழக்குமாகாணமும் வழங்கிய பரிசுகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

ஆபிரிக்கக் கவிதைகள் தொகுப்புக்குக் கிடைத்த விருதுகள் தந்த மன அலைகளைக் கூறுங்கள்

தேசிய மட்டத்திலும், மாகாண மட்டத்திலும் என் முயற்சிக்கு ஒரு கணிப்பு - அங்கீகாரம் - கிடைத்தது குறித்து மனநிறைவடைகிறேன். இத்துறையில் இன்னும் உற்சாகமாக ஈடுபடக் கிடைத்த ஊக்கமாக இதைக் கொள்கிறேன்.

உங்களது எதிர்காலத்திட்டங்கள் பற்றிக் கூறுங்கள்

ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களுடைய கவிதை, சிறுகதை, நாடகம் அடங்கிய ஆங்கில மொழி பெயர்ப்புத் தொகுதி வெளியிடுதல்.

ஆங்கிலத்தில் எழுதும் சிங்கள எழுத்தாளர்களுடைய ஆக்கங்களைத் தமிழில் மொழிபெயர்த்து ஒரு தொகுதி வெளியிடுதல்.

ஆபிரிக்கச் சிறுகதைத் தொகுதி ஒன்று வெளியிடல்-

ஆகிய முயற்சிகளில் ஈடுபடவுள்ளேன்

இளங் கவிஞர்களுக்கு நீங்கள் சொல்ல விரும்புவதென்ன

நிறையப் படியுங்கள். உலகை - வாழ்க்கையை உற்று நோக்குங்கள். சிறியன சிந்தியாதீர்கள். மானுடத்தை நேசியுங்கள்.

எந்தன் பெயராலே

ஆங்கில மூலம் : Grace Nichols

தமிழில் : தமிழினி

(பேராதனை)

அடிவயிற்றில் அழுத்தும் சுமையுடன் குழந்தை.

கருப்பை
இருள் தோய்ந்த நிலவின்
ஓர் ஒளிவளைவு.

கால் அகட்டி நான் குந்தியிருந்தேன்
வாடிய வாழையிலைகளின் மேலாக.

பூமிக்கும் கட்டளையிட்டேன்
உன்னை ஏற்றுக் கொள்ளும்படி.

எந்தன் பெயராலே
எந்தன் உதிரத்தாலே

உன்னை ஏற்றுக் கொள்ளும்படி.

என் சுருள்வுறு அவரைக் கொடி.

என்கறைபட்டுப் பழிசேர்ந்த

முழுமைநிறை குழந்தை



என் முறைகேட்டுச் செயல்விளைவு
என் இளம்பயிர்
என் ஊசியிலைக் குத்துச் செடி
என் விசித்திரக் கலப்பினத் தோன்றல்
என் சின்ன உதிர உறவு.

அடர்ந்த புற்களுள் வழுக்கிச் செல்லும் பாம்பு
உன் கண்முன் வந்து விழும்படி செய்.

தன் தடம் வழியே '(மட்டத்)தேள்'
வளைந்து நெளியவும், மடிப்புற்றுச் சுருங்கவும் விடு.

'கெடுதி' தன் பார்வையை உன்மீது பரப்பு முன்னரே
அது தன் குரல்வளையைத் தானே
நெரித்துத் திணறும் படி விடு.

என் உதிரத்தால்
நான் உன்னைக் கழுவித் தாய்மையாக்கினேன்
என் கண்ணீர்த் துளிகளால்
நைஜர் நதியினை நிரப்பினேன்.

என் இனிமையானவனே,
இப்பொழுது
இது உனக்குத்தான்
நீராடுவதற்கும்
நீந்தி விளையாடுவதற்குமாக............

கவிஞரைப் பற்றிய சில குறிப்புக்கள்:

Grace Nichols

கயானாவில் (Guyana) பிறந்து வளர்ந்தவர் 1977 ஆம் ஆண்டில், பிரித்தானியாவில் குடியேறியதிலிருந்து Lewes நகரில் வசித்து வருகிறார்.

1983 ஆம் ஆண்டு, பொதுநலவாய அமைப்பின் கவிதைக்கான பரிசு 'I is a long-memoried woman' என்ற இவரது தொகுப்புக்கு வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, 'The fat black woman's Poems', 'Lazy thoughts of a lazy woman' ஆகிய தொகுப்புக்களும் வெளிவந்தன.

சிறுவர் இலக்கியத்திலும் அதிக ஈடுபாடுடைய இவர், 'Come on into my tropical garden', 'Give yourself a hug' என்ற இரு சிறுவர் பாடல் தொகுப்புக்களையும் எழுதியுள்ளார்.

இவரது முதலாவது நாவல் 'Whole of a morning sky', 1986 ஆம் ஆண்டு வெளிவந்தது. இவை தவிர பல பாடல் திரட்டுக்களையும் இவர் பதிப்பித்துள்ளார். அவற்றுள் Poetry jump up, Can I buy a Slice of sky?, A Caribbean dozen ஆகியன முக்கியமானவையாகும். இவரின் அண்மைக்காலத் தொகுப்பான Sunris, Virago வினால் வெளியிடப்பட்டது.

~தமிழினி

வாசகர்களே,

புதிய திசையிலான
இந்த பயணம் தரும் அனுபவங்களை
எங்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள் நீங்கள் எழுத்தில் தரும்
கருத்துக்கள் பயணத்தை மேலும் செம்மைப்படுத்த உதவக் கூடும்.

சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட பேக்கரி
உணவு வகைகளுக்கு :

அமுல் பேக்கரி

**இயந்திர சாதனங்கள் மூலம்
நவீன முறையில் தயாரிக்கப்பட்ட
பேக்கரி உணவு வகைகளான**

பேஸ்ரி
ஸ்பெஷல் பணிஸ்
ஸ்பொஞ்ஸ் கேக்
புரூட் கேக்
சொக்கிளேற் கேக்
றிச் கேக்
சுவீற் றோல்

மற்றும் அனைத்து பேக்கரி உற்பத்திகளுக்கும்
யாழ் நகரில் நாடவேண்டிய இடம்:-

அமுல் பேக்கரி

462, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

ஓடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

ஆத்மா : ஓர் அறிமுகம்

"மனிதத்தின் இருப்பைத் தேடி" எனும் மகுடவாக்கியத்துடன் நம்பிக்கை யளிக்கும் விதத்தில் ஒரு கலை-இலக்கிய -அறிவியல் இதழ் வெளிவந்து கொண்டிருக்கிறது. மனிதம் கலந்தாய்வுக் குழுவினரால் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியிடப்படும் ஆத்மா சஞ்சிகையின் தேடல் 14 (நொவம்பர் - டிசம்பர் 2002) அண்மையில் படிக்கக் கிடைத்தது.

முகப்பில் குர்திஸ் கவிதையொன்றுடன் வெளிவந்திருக்கும் இந்த இதழின் கலந்தாய்வரங்கில் அ.யேசுராசாவுடனான திரைப்படம் தொடர்பான ஆரோக்கியமான நேர்காணல் இடம் பெற்றுள்ளது. "பொதுப்புத்தி தொடர்ந்தும் அவமதிக்கப்படுவதை உணர முடியாத அளவிற்குப் பழக்கமாகிப் போய்விட்ட ஓர் இரசனை முறைக்குள் பார்வையாளர் சிக்கியுள்ளனர்" என்று இன்றைய நிலை விளக்கப்படுகிறது.

"தாகத்திற்கு மரணம்' எனும் கட்டுரை கொக்ககோலா, பெப்சி பானங்கள் விளைவிக்கும் கேடுகளைப் பட்டியலிடுகிறது. "போரின் குழந்தைகள்" எனும் உளவியற் தொடர் குழந்தைகளிற்கு ஏற்படும் பாதிப்புக்களைச் சொல்கிறது "எங்கே போனது இந்த வானொலி?" எனும் தலைப்பில் பண்பலை வானொலிகளால் ஏற்படும் சீரழிவு விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இவை தவிர '2003 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டம் பற்றிய குறிப்புக்கள், 'புதிய வயல்' எனும் கவிதைகள் பகுதி. 'அவள்' எனும் பெண்களுக்கான பகுதி. மாணவர்களின் 'அக்கினிக் குஞ்சுகள்' என்பனவும் இடம்பெற்றுள்ளன.

சமுதாய நல நோக்கிலான அம்சங்களைத் தாங்கி A4 அளவில் 12 பக்கங்களுடன் ஆத்மா வெளிவருகிறது.

இதில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய அம்சம் யாதெனில் தனி இதழ் ஒன்றின் விலை ரூ.5 மட்டுமே,

"நிதிப் பலமற்று மனிதம் ஒன்றில் மட்டும் நம்பிக்கை கொண்டு இவ்விதழைக் கொண்டு வருகிறோம்" என்கின்றனர் ஆசிரிய பீடத்தினர். ஆனால் இவ்விதழ் பரந்த தளத்திற்குச் செல்லாமல் நண்பர்களுடன் குறுகி விடுவதாக ஐயுற நேர்கிறது. தபாற் செலவு உட்பட 12 இதழ்களுக்கான சந்தா ரூ.80 மட்டுமே,

இவர்களது முகவரி-
ஆத்மா
மனிதம் கலந்தாய்வுக் குழு
இல.1/7, மடம் வீதி,
யாழ்ப்பாணம்

துளசிராம்.

த.ஜெயசீலன்

இரண்டு கவிதைகள்

பிடிப்பு

உன்னுடைய மென்மை,
உனது அமைதி, ஒரு
தென்றலெனப் பரவசமாய் வருடும் இசைச்சிரிப்பு,
கண்ணிற் பொழியும் கருணை,
அதற்குள்ளே
மின்னும் கவிதை,
மிதக்கின்ற உன்நாணம்,
கன்னச் சிவப்பில் கரைந்திருக்கும் நின்பெண்மை,
சின்ன மலர்களுடன்
ஓர் மலராய்ச் சிலிர்க்கின்ற
அன்பு, பணியும் அறிவு, விகற்பமற்ற
பண்பு, அதிரா அழகு, உனைச்சூழ
என்னென்று எடைபோட முடியாத ஓர் மௌனம்.
இவைதான் உனில்.... எனக்குப் பிடித்தவைகள்!
எனைக்கண்டால்......
கவிழ்ந்த தலையோடு காணாமற் போகிறாயே....
எவைதான் எனிலுனக்குப்
பிடிக்காத என் செயல்கள்?

கவிச்சங்கு ஊதிடுவேன் நான்

ஈனம் அகன்று, இடிகலைந்து மனதுள் அழும்
மோனம் முடிந்து,
முழுசாக மூச்சுவிட்டுப்
பாடும் பரவசத்தை, பயந்தடங்கா நிம்மதியை,
ஓடி உலைந்து ஊம்பி
உயிர்காக்கா யதார்த்தத்தைத்,
தேடிச் சிவந்த விழி சிறிது துயில்கிறது.
சேடம் இழுத்த வாழ்வு சிராய்ப்பு மாற்ற மருத்திடுது.
மருந்துக்காய்...... அன்று

மரணத்துடன் 'குத்தி
முறிந்து' விட்டு... இன்று மருந்து மலையாகக்
குவிய... மரணத்தைக் குட்டிக் கலைத்துயிர்த்துக்
கவியாய் மலர்கின்றோம்.
கட்டு, தளை அறுத்து
விட்டாத்தியாய் இன்று விண்ணை அளைகின்றோம்.
கட்டாயம் எங்கள்
மிகுதிக் கவலை அறும்.
பட்டதுயர் பாறும். பணிதல் மறந்தவராய்....
எங்கள் தொலைந்த முகங்களினை மீட்டணிந்து,
எங்கள் இருதயத்தை 'அடைவில்' இருந்தெடுத்து,
எங்கள் தலையெழுத்தை
நாமே எழுதுகையில்....
சங்கை வரும்
அன்றென் கவி சங்கெடுத்தூதும்.

த.ஜெயசீலன்

நல்லூரைச் சேர்ந்தவரான த.ஜெயசீலன் தொண்ணூறுகளிற் கவிதை எழுதத் தொடங்கியோரில் குறிப்பிடத்தக்க ஒருவர். 05.03.1973 இல் பிறந்த இவர் யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவர். இப்போது விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர்.

ஜெயசீலன் சந்தத்துடன் கவிதை தருபவர். மரபு இலக்கியங்களில் ஆழ்ந்த ஈடுபாட்டுடன் புதுமையை நோக்குவது இவரது இயல்பு.

கவிதைத் துறையிலேயே பெருமளவு கவனம் செலுத்திவரும் இவர் தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் கவிதை படைக்கத் தொடங்கினார். பல்வேறு பத்திரிகைகள் சஞ்சிகைகளில் இவரது கவிதைகள் வெளிவருகின்றன. வானொலியிலும் இவரது கவிதை வாசிக்கப்படுகின்றது. கவியரங்குகளிலும் இவர் கவிதை நன்கு பிரகாசித்து வருகிறது.

பாரதி மற்றும் புதுவை இரத்தினதுரை இவரைக் கவர்ந்த கவிஞர்கள். இளையராஜாவின் இசையும் இவருக்கும் பிடித்தமானது.

ஜெயசீலனின் முதற் தொகுப்பான 'கனவுகளின் எல்லை' 2001 நவம்பரில் வெளியானது. சுமார் 2000 கவிதைகளிலிருந்த தெரிந்து மேலும் தொகுப்புக்களை உருவாக்கவுள்ளார்.

உயிர்த் தொழில்நுட்பத்தில் ஓர் உன்னத புரட்சி!

RNA interference - RNAi Technology

~ *சேந்தன்*~

நம்பக் கூடியனவெல்லாம் நம்பமுடியா தனவாகவும் நம்பமுடியாதன வெல்லாம் நம்பக்கூடியனவாகவும் திகைப்பூட்டும் விதத்தில் மாற்றமுறுகின்ற இக்கால விஞ்ஞான யுகத்திலே, அதன் உன்னத பகுதிக ளில் ஒன்றான உயிர்த் தொழில் நுட்பத் துறை யிலே ஒரு பெரும் புரட்சியே ஏற்பட்டிரு க்கின்றது. எதிர்கால ஜீவராசி களின் வாழ்க்கைச் சரிதத்தில் அபரிமிதமான விளைவு களை ஏற்படுத்தப்போகும் குறிப்பிட்ட முன்னேற்றமானது, இன்றைய பொழுதில் உயிரியல் விஞ்ஞானத்தின் உற்சாகம்மிக்க ஆய்வுக்களனாக உருப்பெற்றுள்ளது.

RNA interference [RNA குறுக்கீடு] என அழைக்கப்படும் இப்புதிய தொழில்நுட்பமானது புற்றுநோய், எயிட்ஸ் முதலான சவால்மிகுந்த நோய்களின் தாக்கத்திற்கு எதிராகக் கணிசமான பலன்களைப் பெற்றுத்தருமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதிலும் குறிப்பாக வைரஸ் நோய்கள் மற்றும் அவயமாற்றுச் சத்திரசிகிச்சை போன்றவை தொடர்பாக இம்முறை மேலும் அவசியமானதாகின்றது. வக்சீன்களிலும் antiviral மருந்துகளிலுமே வைரஸ் நோய்களைக் கட்டுப்படுத்து வதற்காகத் தங்கியிருந்த மருத்துவத்துறைக்கு பிறப்புரிமைத் தொழில்நுட்பத்தி லேற்பட்டுள்ள புரட்சிகரமான இந்த அபிவிருத்தி ஒரு வரப்பிரசாதமாகும். அதிக நச்சுத்தன்மையோ, தொடர்பக்க விளைவுகளோ, நீண்ட காலத்திற்குப் பின்பற்ற வேண்டிய சிகிச்சை முறைகளோ இன்றி உயிர்க்கலத்தின் அடிப்படையான செயற்பாடுகளிற்குள் ஊடுருவி விளைவிக்கும் சில மாற்றங்களே நோயிலிருந்து விடுபடுவதற்குப் போதுமானதாக இருக்கு மென்பதே இதிலுள்ள இன்றியமையாத தன்மையாகும்.

உயிர்க்கலத்தின் தகவல் மற்றும் தொழிற்பாட்டு மையமான கருவினுள்ளே, DNA[Deoxyribo Nuclcic Acid] எனப்படும் இரட்டை விரிபரப்புச் சுருள் அமைப்பினுள்ளே பெரும்பாலான அங்கிகளிற்குரிய பிறப்புரிமை அலகுகள் பேணப்பட்டுள்ளன. இவ்வாறு எந்தவோர் அங்கியினதும் பிறப்புரிமைத் தகவல்கள் அடக்கப்பட்டுள்ள குறித்த அந்தப் பகுதியுள் இடம்பெறும் சிக்கலான செயற்பாடுகளால் அப்பிறப்புரிமைத் தகவல்கள் சிலவேளைகளில் மாற்றியமைக்கப்படக்கூடும். அங்கிகளின் வளர்ச்சி மற்றும் அபிவிருத்தியின் சில முக்கியமான கட்டங்களில் அம்மாதிரியான நிகழ்வுகள் அவசியமாகலாம். ஆனால், இவ்வாறான பிறப்புரிமை அலகுகளுடன் நேரடியாகத் தொடர்புபடும் செயற்பாடுகளை அவை திரட்டப்பட்டிருக்கும் தானத்திற்கு வெளியே விளக்கமாகக் கூறுவதானால் கருவிற்கு வெளியே நிகழ்த்துவதே இங்கு ஆராயப்படும் தொழில் நுட்பமுறையுடன் சம்பந்தப்பட்டதாகும்.

புரதத் தொகுப்பும் புதிய தொழில் நுட்பமும்

RNA interference எனப்படும் இப்புதிய முறையின் அடிப்படைச் செயற்பாடுகளைப் பின்வருமாறு எளிதாக விளங்கிக் கொள்ளலாம். முதலில் புரதன் தொகுப்பின் போது கருவில் DNA யில் சேமிக்கப்ப ட்டிருக்கும் பிறப்புரிமைத் தகவல்கள் RNA[Ribo Nucleic Acid] க்களில் ஒருவகையான செய்திகாவும் RNA [mRNA] யினால் பிரதியீடு செய்யப்பட்டு கருமென்சவ்வி லுள்ள நுண்டுளைகள் வாயிலாகக் கலத்தின் குழியவுருவிற்குக் கொண்டு வரப்படுகின்றன.



Richard Jorgensen

அங்கு mRNA யுடன் றைபோசோம்ஸ் இணைந்து அதில் காணப்படும் பிறப்புரிமைத் தகவல் ஒழுங்கடிப்படையில் குழியவுரு விலுள்ள அமினோ அமிலங்கள் வகைகுறித்து அடுக்கப்பட்டு அதன்பின் புரதங்கள் தொகுப்படைகின்றன. இப்படியான பொதுவான அமைப்புச் செயற்பாட்டை குறித்த பிறப்புரிமைச் தொழில்நுட்பத்தில் எவ்வாறு சாதகமாக அமைகலாம்?

இங்கு கருவிலிருந்தோ அல்லது வெளியிலிருந்து புகுத்தப்படுவதன் மூலமோ சிறிய இரட்டை இழைகளாலான [double-stranded] RNA க்கள் குழியவுருவினுள் பிரவேசிக்கின்றன. இவை அங்கிருக்கும் நொதியங்க ளுடன் சேர்ந்து ஒருவகையான சிக்கற் சேர்வைகளைத் தோற்றுவிக்கின்றன. அப்படியான சேர்வைகள் அதிலுள்ள இரட்டை இழைகளாலான RNAயின் ஓர் இழையுடன் பொருந்தும் mRNA இனைத் தாக்குகின்றன. இதன்மூலம் நோயோ அல்லது சீரின்மைகளோ ஏற்படக் காரணமான குறித்த mRNA க்கள் அழிக்கப்பட்டு விடுகின்றன. பிறப்புரிமைத் தகவல்களைப் பேணும் கார ஒழுங்குத் தொடரில் ஏற்படும் ஒரு சிறிய மாற்றமே பிறப்புரிமை ஒழுங்கமைப்புக்களில் பாரிய மாற்றத்தை உண்டாக்குமென்ற வகையில் இப்புதிய தொழில்நுட்ப முறை அவசியமானதாகின்றது.

புரட்சியின் வித்துக்களும் அதன் விளைவுகளும்

2002ம் ஆண்டின் நடுப்பகுதிகளில் பரிசோதனைக் குழாயில் இத் தொழில்நுட்பம் பிரயோகிக்கப்பட்ட மனிதக் கல ங்கள் HIV மற்றும் போலியோ வைரசின் தாக்கங்களிற்குக் காட்டிய எதிர்ப்புத்தன் மையே மேற்போந்த ஆராய் ச்சியின் அகிலப் பிரபலத்திற்குக் கால்கோளா கும். அரிசோனா பல்கலைக்கழகத்தின் தாவரவியற்றுறைப் பேராசிரியரான Richard Jorgensen 1990 இல் petunia எனப்படும்

தாவர வகை யொன்றின் நாவல் நிறமான பூவிதழ்களை மேலும் கடும் நிறமாக மாற்றுவ தற்காக நிறமூட்டல் தொடர்பான பிறப்புரிமை அலகுகளில் மேற் கொண்ட பரிசோதனையே இன்றைய RNA interference தொழில்நுட்பத்திற்குரிய வித்தாக அமைந்தது.

இதனைத் தொடர்ந்து வேறும் சில தாவர இனங்களிலும் நுண்ணு யிரிகளிலும் மதுவங்களிலும் இவ்வாறான ஆராய்ச்சிகள் இடம்பெறலாயின. அவற்றின் விளைவுகள் பரிசோத னையாளர்களையே ஆச்சரிய மூட்டும் விதத்தில் வெளிவந்தபோதும் இச்செயன்முறையின் அடிப்படை நுட்பத்தை எவராலும் சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை.

ஆனாலும் சில ஆண்டுகளின் பின்னர் பால்டிமோரிலுள்ள Johns Hopkins பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானி Andrew Fire என்பவர் nematode புழுக்களில் மேற்கொண்ட பரிசோதனைகளிலிருந்தே இக்கண்டு பிடிப்பின் மூலவிளக்கம் தெளிவு பெற்றது. கட்டுப்பாட்டு அமைப்புக்களுடன் தொடர்ச்சியாக அவர் செய்த பரிசோதனைகளின் முடிவில் குறித்த பிறப்புரிமை அலகுகளை அவற்றிற்கு ஈடான இரட்டை இழை கொண்ட RNA யினால் செயலிழக்கச் செய்ய வைக்கலாம் என்பது நிரூபணமாகியது. இதன் வழியான ஆராய்வுகளில் மேலும் சில தாவர இனங்கள், பழ ஈக்கள் போன்றவை தமது கல உடலிற் கொண்டிருக்கும் சிறிய இரட்டை இழையான RNA க்களினால் அதாவது வைரஸ் தாக்கங்களிற்குரிய குறித்த பிறப்புரிமை அலகுகளுடன் அந்த RNA க்கள் இடைத்தாக்கமுற்று அவற்றை அடக்குவ தால் நிர்ப்பீடணம் பெறப்படுகின்றதென்ற உண்மை புலனாகியது.

ஆகவே இவ்வாறான இரட்டை இழைகொண்ட RNA க்களைப் பரிசோதனைக் குழாய்களில் உருவாக்கி அவற்றின் வாயிலான மனிதன் போன்ற உயர் அங்கி களிலும் அத்தகைய பிறப்புரிமை அலகுத் தாக்கங்களை ஏற்படுத்த முடியுமா என்ற தேடலிற்குத்தான் கடந்த யூலை மாதமளவில் விடை காணப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் ஃபார்மிங்ட னிலுள்ள பல்கலைக்கழக மொன்றின் நுண்ணுயிரியல் பேராசிரியர் Gordon Carmichael அவர்கள் எதிர் காலத்தில் இக் கட்டுரையில் ஏலவே குறிப்பி ட்டவாறான நோய்களிற்கு இந்த RNA குறுக்கீடு தொழி ல்நுட்பம் பேருதவியாக இருக்கப்போகின்ற தெனத் தெளிவுபடுத்தியுள்ளார். எவ்வாறெ னினும் இன்னுமே இம்முறையானது அதன் ஆரம்பப் பருவங்களிலேயே உள்ள தென்ப தனை உணர்ந்துள்ள உயிரியலாளர்கள், இதன் பெறு பேறுகள் தரும் உற்சாக உந்துத ல்களினால் சுறுசுறுப்படைந்திருக்கின் றார்கள்.



Andrew Fire

சவால்களை மீறும் சாதனைகள்

இரட்டை இழை RNA க்களினால் செயலிழக்கச் செய்யப்படவேண்டிய குறித்த பிரச்சினைக்குரிய பிறப்புரிமை அலகுகளைக் கண்டறிவது, அதற்கமைய உருவாக்கப்பட்ட RNA க்களைக் கலவுடலினுள் உட்புகுத் துவது போன்றவற்றிலுள்ள நுண்ணிய இடர்ப்பாடுகள் இங்கு எழாமல் இல்லை. ஆனால் இவ்வளவு தூரம் முன்னேறிய பிற்பாடு இவ்வாறான சிக்கல்களிற்குத் தீர்வு காணாமல் விடுவார்களா?



Gordon Carmichael

சுண்டெலிகளில் செய்யப்பட்ட ஆய்வுகளும் அதிகளவான குருதி விநியோகம் கொண்ட ஈரல், சிறுநீரகம் போன்றவற்றின் வினைத்திறன்களும் மேற்படி விடயங்களில் திருப்திகரமான முன்னேற்றங்களிற்குச் சமிக்கை காட்டியுள்ளன.

எப்படியோ, உயிர்த் தொழில்நுட்ப வரலாற்றில் ஏற்பட்டுள்ள இந்த மகத்தான திருப்பத்தைச் சாதகமாக்குவதற்கு அறிவியலையும் பொருளாதாரத்தையும் அதிகளவில் உபயோகப்படுத்தியேனும் முயற்சிப்பதற்கான பகீரதப் பிரயத்தன ங்கள் விறுவிறுப்பாகத் தொடர்கின்றன. அவற்றின் விளைவுகள் உயிரியல் வரலாற்றிற்கே ஓர் உன்னதத்தைப் பெற்றுக் தரும்; தரவேண்டும் என்பதே எல்லோரதும் எதிர்பார்ப்பாகும்.

ஆதாரம் : **THE INDEPENDANT**
உதவி : து.அனுஜன்

தூண்டியின் ஆய்வரங்குகள்

'தூண்டி' சஞ்சிகையின் தொடர்வருகை தடைப்பட்டுள்ள போதிலும் தூண்டி இலக்கிய வட்டத்தின் செயற்பாடுகள்-இலக்கிய சந்திப்புக்கள், நூல் வெளியீடு, ஆய்வரங்குகள் எனத் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

யாழ்.பல்கலைக் கழக தமிழ்ச்சங்க ஆதரவுடன் தூண்டி ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை ஆய்வரங்கை 05-01-2003 இல் யாழ்.பல்கலைக் கழகத்தில் நடத்தியது.

பேராசிரியர்கள் நந்தி, சண்முகதாஸ் ஆகியோரின் தலைமையில் இரு அமர்வுகளாக நடந்த நிகழ்வில் ஈ.குமரன், மு.பொ, ரஞ்சகுமார், செ.யோகராசா ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்தினர். செம்பியன் செல்வன், செ.திருநாவுக்கரசு, கோகிலா மகேந்திரன், யேசுராசா ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

பெருமளவு இளையவர்கள் பங்குபற்றிப் பயன் பெற்ற இந்த நிகழ்வின் தொடர்ச்சியாக எதிர்வரும் மே முதல் வாரமளவில் கவிதை ஆய்வரங்கு நடைபெறவுள்ளது.

விபரங்களுக்கு-
தி.செல்வமனோகரன், கேணிபடி, திருநெல்வேலி.

ஒரு கவிதையும் இரு குறிப்புகளும்

அவமானப்படுத்தப்பட்டவள்

உங்களுடைய வரையறைகளின்
சாளரத்துக்குப் பின்னால்
நீங்கள் என்னைத் தள்ள முடியாது.
இதுவரை காலமும்
நிரந்தரமாக்கப்பட்ட சகதிக்குள் கிடந்து
வெளியே எடுத்த வரப்பட்ட
ஒரு சிறிய கல்லைப் போன்று
நான் என்னைக் கண்டெடுத்துள்ளேன்.

என்னுடைய நாட்களை நீங்கள்
பறித்துக் கொள்ள முடியாது.
கண்களைப் பொத்திக் கொள்ளும்
உங்கள் விரல்களிடையே
தன்னைக் கீழிறக்கிக் கொள்ளும்
ஒரு குட்டி நட்சத்திரம் போன்று
எனது இருத்தல்
உறுதி பெற்றது.

நிராகரிக்கப்பட முடியாதவள் நான்.

இனியும் என்ன,
தூக்கியெறியப்பட முடியாத கேள்வியாய்
நான்
பிரசன்னமாயுள்ளேன்
என்னை
அவமானங்களாலும்
அநாகரிக வார்த்தைகளாலும் போர்த்துங்கள்
ஆனால்
உங்கள் எல்லோரினதும்
நாகரீகம் வாய்ந்த கனவுகளின் மீது
ஒரு அழுக்குக் குவியலாய்
பளிச்சிடும் உங்கள் சப்பாத்துக்களை
அசுத்தம் செய்கிறேன்.
என்னுடைய நியாயங்கள்
நிராகரிக்கப்படும் வரை
உங்களின் எல்லாப் பாதைகளும்
அழுக்குப் படிந்தவையே.

(சிவரமணி கவிதைகள்)

சிவரமணி யாழ் பல்கலைக் கழத்தில் என்னுடைய மாணவியாகவிருந்தவர். அப்போதே அவர் ஆளுமையுள்ள பெண்ணாகத்தான் இருந்தார். அவருடைய ஆளுமைகளை வளர்த்தவர் என்ற பெருமை பாராட்ட விரும்பவில்லை. சுண்டிக்குழி பாடசாலையில் நடந்த தமிழ்த்தின விழாவொன்றில் வேம்படிப் பாடசாலையில் இருந்து வந்து சிவரமணி கவிதை பாடினார். அப்போதுதான் நான் அவரை முதலில் கண்டேன். விடுதலை என்ற கவிதை,

பிறகு பல்கலைக்கழக வாழ்வும், பலரின் நட்பும் சமூக சிந்தனைகளின் தாக்கங்களும் அவரை வளர்த்தன. பல்கலைக்கழகத்தில் நிறைய வளர்ந்தார். நிறையக் கவிதைகளை எழுதினார். பொது நிகழ்ச்சிகளில் ஈடுபட்டார். பெண்கள் ஆய்வு வட்டத்தில் முக்கிய அங்கத்தவராயிருந்தார். அவருக்கு நன்கு ஆங்கிலம் தெரியும் ஆகவே பலமொழிக் கவிதைகளைப் படித்தார். இவையெல்லாம்தான் அவருக்கு வித்தியாசமான கவிதை மொழியை உருவாக்கியதென்று நான் நினைக்கின்றேன்.

அவருடைய கவிதைகளில் நேரடியான அரசியலைக் காணாவிட்டாலும் உள்ளோட்டத்தில் சமூக விமர்சனங்களைக் காணமுடியும். குறிப்பாக 89,90களில் அவருடைய சொந்த வாழ்க்கையில் ஏற்பட்ட நெருக்குதல்களும், பிரச்சினைகளும் அவரின் விமர்சனத்திற்குப் பின்னணியாகவிருந்தன. சமூகத்தில் இனம், பால், வர்க்கம், சாதிமுறைகளில் ஒடுக்கப்பட்டவர்கள் தங்களுடைய நியாயத்தை பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதுதான் உட்கருத்தாகவிருந்தது.

சிவரமணி பெண் என்பதால் தூசிக்கப்பட்டாள், அவமானப்படுத்தப்பட்டாள், ஒடுக்கப்பட்டாள் என்பது அவளுடன் நெருக்கமானவள் என்பதால் எனக்குத் தெரியும். அவளுடைய அவமானப்படுத்தப்பட்டவள் என்ற கவிதை இவற்றைப் பிரதிபலிக்கின்றது எனலாம். இதன் உணர்வுகள் முக்கியமானவை அவருடைய கருத்துக்கள் தோற்றுப்போய்விடுமோ என்ற அச்சம் அவருக்கிருந்தது. அவருடைய கருத்தின் மீதான பற்றும் தன்மீதான பற்றும் அவருடைய கவிதையில் கலந்திருப்பதைக் காணலாம். இதனை விபரமாக சிவரமணி கவிதைகள் என்ற தொகுப்பின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளேன்.

~சித்திரலேகா மௌனகுரு~
(மூன்றாவது மனிதன் நேர்காணல்)

போரின் தாக்கங்கள் பெண்ணின் புற உடலில் ஏற்படுத்திய தாக்கங்களோடு அக உடலில் விளைவித்த காயங்களின் வலியையும் இவளது கவிதைகள் வெளிக்காட்டின. இவளை ஒத்த கவிஞைகளின் கவிதை மொழியிலும் இதே வலி ஏறியிருந்தது. காயங்களின் வலியும், கண்டடைந்த மொழியில் ஏறியிருந்த வலிமையையும் சேர்த்தே கட்டுகிறேன். சிவரமணியின் மொழியில் சொன்னால்: "சேற்றுள் புதைந்த கல்லாகத்தான்" அவள் தன் மொழியைக் கண்டடைந்தாள். ஆயினும் அவளையும் மீறியழுத்திய சூழலின் நெருக்குவாரம் அல்லது சுமை.

அந்தச் சுமையை உதறுவதற்குப் பதிலாகத் தன்னையே உதறிவிடும் கொடுமை நிகழ்கிறது. அவள் தான் கண்டடைந்த மொழியின் மூலம் விடுதலையை சாத்தியப் படுத்தாமல் அம்மொழியின் மூலமாக கண்டடைந்த கவிதா அடையாளங்களையும் சேர்த்துத் தன்னையும் அழித்து சாவின் மொழியினால் சமூகத்தின் மேலொரு செய்தியை எழுத முயன்றாள். பெண்ணின் அடையாளத்தை மறுக்கும் சமூகத்தின் மீது தன் அடையாளத்தை அழித்து எறிந்ததன் மூலம் ஓர் அடையாளத்தை நிறுவ முனைந்தாளா? சிந்திக்கவேண்டிய வலுவுள்ள ஒரு சாவின் மொழியிலான கேள்வியாகி நிற்கிறாள் சிவரமணி.

~சு.வில்வரத்தினம்~
(சுட்டும் விழி 01)

வேண்டும் ஓர் இருதய உலகு

நெஞ்சுக் குழியின் இடது மூலையில்
மனித ஜீவனின் தைனமோ
'வட்டப்' சந்தத்தில் உயிர் தரிக்கிறதா
இல்லை அதில் மூழ்கத்தான் அது புகுந்ததா
மகோன்னத சக்திகளின் ஊற்று
இன்று வரண்டு போனதேன்?
குருதி தோய்ந்து துடிக்கும் அது.
வெறும் கைப்பிடிச் சதைப் பிண்டம் தானா
ஒவ்வொருவனும் அதைத் தன் கரங்களில்
தொட்டுப்பார்க்க முடிந்தால்...
இதயங்கள் வெளித்தாவிப் பேசினால்
மண்டைக் குழியில் மூளையின் சாதுரியங்கள்
பொய்த்துப் போய்விடும்
பொய் கபடமற்ற உலகு ~ அங்கே
ஒளிவு மறைவுக்கிடமில்லை
பொய்யரின் திரைகள் பொடிபடும்
காலபரிமாணங்களில் ஒரு நாள்
இருதயமே உயிரினமாய் உலாவரும்...

~ கு.திவ்வியானந் ~



"வரதர்"

ஈழத்தின் இலக்கிய வரலாறு எழுது கையில் தவிர்க்க முடியாத பெயர்களில் ஒன்று 'வரதர்' என்பது. சிறுகதை, புதுக் கவிதை, குறுநாவல், இதழியல், பதிப்பு த்துறை என இலக்கியத்தின் எத்துறையை எடுத்தாலும் முத்திரை பதித்தவர் வரதர்.

'வரதர்' என்கிற தி.ச வரதராசன் 1924 இல் யாழ்ப்பாணத்திலுள்ள பொன்னா லையில் பிறந்தார். சிறு வயது முதல் நிறைய வாசிக்கத் தொடங்கிய இவர் மகாபாரதம், இராமாயணம் போன்ற இதிகாச-புராணக் கதைகளில் ஆரம்பித்துப் பின்னர் ஆனந்த போதினி, பிரசண்ட விகடன், கலைமகள் போன்ற சஞ்சிகைக ளையும் பலவிதமான நூல்களையும் வாசிக்கத் தொடங்கினார். தொடர்ச்சியான இந்த வாசிப்பே அவரை எழுதத்தூண்டியது எனலாம்.

ஈழத்தின் மூத்த எழுத்தாளர் பலரையும் போல வரதர் எழுதத் தொடங்கியதும் ஈழகேசரி (1930-58)யிற் தான். ஈழகேசரி கல்வி அனுபந்தத்தில் கட்டுரைகள் எழுதி வந்தார். பின்னர் ஈழகேசரி ஆண்டுமலரில் வெளிவந்த 'கல்யாணியின் காதல்' வரதரின் முதற்சிறுகதை.

தொடர்ச்சியாக எழுதிவந்த வரதர் அவரையொத்த எழுத்தாளர்களுடன் தொடர்பு வைத்திருந்தார். அவர்களை இணைந்து ஓர் எழுத்தாளர் சங்கம் உருவா க்கும் ஆவல் வரதருள் எழுந்தது; செயல்வடிவம் பெற்றது.

1934.06.13 இல் ' தமிழிலக்கிய மறுமலர்ச்சிச்சங்கம்' உருவானது. இந்த வகையில் ஈழத்தின் முதல் எழுத்தாளர் சங்கத்திற்கு அடித்தளமிட்ட பெருமை பெறுகிறார் வரதர்.

இதே ஆண்டில் (1934) ஈழகேசரியில் வரதர் எழுதிய 'ஓர் இரவினிலே' எனும் வசன கவிதையே ஈழத்தின் முதற் புதுக்கவிதை எனப்படுகிறது.

தமிழிலக்கிய மறுமலர்ச்சிச் சங்கம் முதலில் 'மறுமலர்ச்சி' எனும் கையெழுத்து சஞ்சிகையை வெளியிட்டது. 1946 பங்குனியில் மறுமலர்ச்சி முதல் இதழ் அச்சி டப்பட்டது. வரதர், கா.மதியாபரணம், நாவற்குழியூர் நடராசன், ச.பஞ்சாட்சரசர்மா க.இ.சரவணமுத்து ஆகிய ஐவருமே முதல்போட்டு மறுமலர்ச்சியைத் தொடங்கினர்.

மறுமலர்ச்சி யாருக்குச் சொந்தம் என்பது பிரச்சினையாகி நீதிமன்றம் வரை சென்று மீண்டே மறுமலர்ச்சி வெளியானது. மறுமலர்ச்சி வெளியீட்டாளராக நடராசன் இருந்தார். ஆசிரியர்களாக வரதரும் அ.செ. முருகானந்தனும் இருந்தனர். 18 ஆவது இதழிலிருந்து அ.செ. முருகானந்தனுக்கு பதிலாக பஞ்சாட்சரசர்மா

பணியாற்றினார்.

1946 பங்குனி முதல் 1948 ஐப்பசி வரை 'மறுமலர்ச்சி' 24 இதழ்கள் வெளியாகின. ஈழத்துச் சிறுகதையின் தனித்துவத்திற்கும் 50களில் ஏற்பட்ட ஈழத்து இலக்கிய எழுச்சிக்கும் அடித்தளமிட்டது மறுமலர்ச்சி தான் என்றால் அது மிகையாகாது.

1952 இல் வரதர் ஆனந்தன் எனும் சஞ்சிகையை ஆரம்பித்தார். இதுவும் ஓர் இலக்கிய இதழே. ஆரம்பத்தில் யாழ்ப்பாணனும் பின்னர் புதுமைலோலனும் ஆனந்தனின் இணையாசிரியராக இருந்தனர்.

1955 இல் வரதர் மஹாகவியை இணையாசிரியராகக் கொண்ட 'தேன் மொழி' யை வெளியிட்டார். ஈழத்தில் கவிதைகளுக்கென வெளிவந்த முதற் சஞ்சிகை தேன்மொழி. தேன்மொழி ஆறு இதழ்களே வெளியாகின.

இவை தவிர 'வெள்ளி' எனும் சஞ்சிகையும் 'புதினம்' எனும் வார இதழும் கூட வரதரால் வெளியிடப்பட்டன. பொருளாதாரக் காரணங்களால் இவையும் நின்று போயின.

வரதரின் பிரசுர முயற்சிகளும் முக்கியமானவை. பண்டிதமணி கணபதிப்பிள்ளை, கைலாசபதி, மஹாகவி, முருகையன், பொன். முத்துக் குமாரன், செங்கை ஆழியான், காரை சுந்தரம் பிள்ளை, சோமகாந்தன், சாந்தன் முதலான பலரது நூல்கள் 'வரதர் வெளியீடு' ஆக வெளிவந்தன.

'வரதரின் பல குறிப்பு' அவரது இன்னொரு முயற்சி. தமிழ் மக்களுக்குத் தேவையான பலவித விடயங்களைத் தொகுத்து ஆண்டுக்கு ஒன்றாக (1971 வரை) நான்கு பதிப்புகள் வெளியாகின.

வரதரின் இதழியற் பணியில் இன்னொரு மைல்கல் அறிவுக் களஞ்சியம். இலாப நோக்கின்றி குறைந்த விலையில் மாணவர்க்கான அறிவுத் தகவல்களைத் தாங்கி அறிவுக் களஞ்சியம் வெளியானது. செங்கை ஆழியான் இணையாசிரியராக இருந்தார். 1995 இடம் பெயர்வு வரை யாழ்ப்பாணத்தில் 3000 பிரதிகள் வரை விற்பனையாகி அமோக வரவேற்புப் பெற்றது அறிவுக்களஞ்சியம்.

வரதர் ஈழத்துச் சிறுகதையாசிரியர்களில் முக்கியமானவர். ஈழத்தின் முதலாவதும் மிக முக்கியமானதுமான மறுமலர்ச்சிச் சங்கத்திற்கு கால்கோள் இட்டவர். இதழியலில் சிறந்து விளங்கியவர். முதற் கவிதை இதழ் வெளியிட்டவர். இவை தவிர ஈழத்தின் முக்கிய பதிப்பாளர்.

வரதரின் சேவைகளைப் பாராட்டி இலங்கைக் கலைக் கழகம் அவருக்கு 'சாஹித்திய இரத்தினம்' எனும் பட்டத்தை அளித்திருக்கிறது.

'திசை புதிது' இதழ்களைத் தொடர்ந்து பெற *வழிகாட்டி* ~

விரும்புவோர் சந்தா செலுத்துங்கள்

தபாற் செலவு உட்பட 4 இதழ்களுக்கு 120/-

8 இதழ்களுக்கு 240/-

மரபணுத்தாக்கம் எங்கள் முயற்சிகளுக்குக் குறுக்கீடு செய்யலாம்.
ஆயினும் எங்கள் விடா முயற்சியால்–

ஊழையும் உப்பக்கம் காண்போம்

~வரதர்~

இது நடந்து சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது.

நான் இளைஞனாகக் கதைகள் எழுதிக் கொண்டிருந்த காலம். என்னையும் ஓர் எழுத்தாளன் என்று இலக்கிய உலகம் ஏற்றுக் கொண்ட நேரம்.

அந்தக் காலத்தில் எனக்கு ஒரு நல்ல நண்பர் இருந்தார். சுப்பிரமணிய நாதன் என்று பெயர். சுருக்கமாக 'நாதன்' என்று சொல்லுவோம்.

என்னைப் போல் நாதனும் நிறைய புத்தகங்கள், சஞ்சிகைகள் வாசித்தார். முக்கியமாக சிறுகதை, நாவல், கட்டுரை, கவிதை போன்ற இலக்கியத்துறைகள் தான் எங்கள் வாசிப்புக் களம்.

சிறுவயது முதலே வாசிப்புப் பழக்கம் எனக்கு இருந்ததால் அந்த வாசிப்பின் பயனாக என்னிடம் சேர்ந்த அறிவு, என்னை ஓர் எழுத்தாளனாக வளர்த்தெடுத்திருந்தது. பத்தாண்டுகால எழுத்துப் பயிற்சி என்னை ஒரு நல்ல எழுத்தாளனாக இலக்கிய உலகில் அறிமுகப் படுத்தியிருந்தது.

கிட்டத்தட்ட ஓராண்டு காலமாக நாதனோடு பழக்கம். அவருக்கு எழுத்துத் துறையிலும் எழுத்தாளர்களிடமும் ஓர் ஈடுபாடு இருந்ததால் ஒரு நாள் என்னைத் தேடி வந்து பார்த்தார். முதற் சந்திப்பிலேயே அவர் நிறையப் படிக்கிறவர் என்பதைத் தெரிந்து கொண்டேன். சந்திப்புக்கள் தொடர்ந்தன. அவர் சிறந்த இரசிகராக இருந்ததோடு, நல்ல மனிதராகவும் இருந்ததால் விரைவில் என்னுடைய நண்பராகவே ஆகி விட்டார்.

நிறைய வாசிக்கிறவர்களில் சிலருக்காவது தாங்களும் எழுதிப் பார்க்க வேண்டுமென்ற ஆசை ஏற்படுவது வழக்கம். நாதனுக்கும் அந்த ஆசை வந்தது.

நான் எதிர்பார்த்தது போலவே, ஒரு நாள் நாதன் ஓர் அப்பியாசக் கொப்பியைக் கொண்டு வந்து என்னிடம் தந்தார். நாற்பது பக்கக் கொப்பி. அதில் இருபத்தைந்து பக்கங்களுக்கு மேல் எழுதப்பட்டிருந்தது.

"அண்ணை, நான் ஒரு சிறுகதை எழுதியிருக்கிறன். நீங்கள் வாசிச்சுப் பார்த்து எப்பிடி இருக்குதெண்டு சொல்லுங்கோ" என்று நாதன் சிறிது கூச்சத்தோடு சொன்னார்.

கொப்பியை வாங்கிக் கொண்டு “ஓ! நல்லது நாதன். நான் ராவைக்கே படிச்சுப் போட்டு நாளைக்குச் சொல்லிறன்” என்று நாதனை அனுப்பி வைத்தேன்.

அன்றிரவு மிகுந்த ஆவலுடன் அந்தக் கதையைப் படித்தேன். இரண்டு மூன்று பக்கங்கள் படிப்பதற்கு முன்பே எனக்குச் ‘சப்’ பென்று ஆகி விட்டது. ஆயினும் முழுவதையும் படித்து முடித்தேன். “சே, நாதனுக்கு இது சரி வராத வேலை!"

அடுத்த நாள் நாதன் வந்து விட்டார். அவருடைய முகத்தைப் பார்க்கவே எனக்குச் சங்கடமாக இருந்தது.

அந்தக் கதையில் செய்யக் கூடிய திருத்தங்களைச் சொல்லி, "இதை இன்னொரு முறை திருத்தி எழுதி ஈழகேசரிக்கு அனுப்பிப் பாரும்" என்று சொல்லிக் கதையைக் கொடுத்து விட்டேன்.

எனக்கு நம்பிக்கையில்லை. அது திருத்தி எழுதக் கூடிய கதையாக இல்லை.

நாதன் அதைத் திருத்தி எழுதினாரா, ஈழகேசரிக்கு அனுப்பினாரா என்பதெல்லாம் எனக்குத் தெரியாது. ஈழகேசரியில் அந்தக் கதை வெளிவரவில்லை என்பது மட்டும் நிச்சயம்.

❖ ❖ ❖

நிறைய வாசிக்கிறவர்கள் தான் நல்ல எழுத்தாளர்களாக வர முடியுமென்பதை நான் பலமுறை சொல்லியிருக்கிறேன்.

ஆனால், இப்போது ஒரு புதிய உண்மையையும் தெரிந்து கொண்டேன்.

‘நிறைய வாசிக்கிறவர்கள் எல்லோருமே சிறந்த எழுத்தாளர்களாகி விட முடியாது!’

நாதன் நிறைய வாசிக்கிறவர் என்பதில் சந்தேகமில்லை. எழுத வேண்டுமென்ற ஆசையும் முயற்சியும் அவரிடமிருந்தன.

ஆயினும் அவரால் ஒரு சிறுகதையைக் கூட உருப்படியாக எழுத முடியவில்லையே!

இது ஒரு புதிராகப் பலகாலம் என் மனதிற்குள் கிடந்தது.

❖ ❖ ❖

பண்டிதர் தேர்வு எழுதிப் பட்டம் பெற்ற எல்லோருமே ஒரு ‘பண்டிதமணி கணபதிப்பிள்ளை’ ஆகி விடுவதில்லை.

முறையாகச் சங்கீதம் பயின்று தேர்ச்சி பெற்றவர்கள் எல்லோருமே ஒரு ‘எம்.எஸ்.சுப்புலட்சுமி’ ஆகிவிடுவதில்லை.

நடிப்புக் கலையில் எவ்வளவோ பயிற்சி பெற்றவர்கள் எல்லோருமே ஒரு ‘சிவாஜி கணேசன்’ ஆகி விடுவதில்லை.

தமது துறைக்கேற்ற கல்வியறிவும், திறமையும், முயற்சியும் உள்ள சிலர் சிகரத்தை எட்டுகிறார்கள்.

அப்படி ஆர்வமும் முயற்சியும் உள்ள பலர் ஓரளவு நல்ல தரத்தை எட்டுகிறார்கள்.

ஆனால் வேறு சிலரோ -

எவ்வளவு முயன்றாலும் அவர்களுக்கு வெற்றி கிடைப்பதில்லை.

ஏன்?

பாரம்பரியம், இரத்தத்தில் ஊறியது, மரபணுத்தாக்கம் என்றெல்லாம் சொல்கிறார்களே -

அப்படி ஏதாவது இருக்குமோ?

அப்படி இருக்காது என்று என் மனம் சொல்ல விரும்புகிறது.

‘முயற்சி திருவினையாக்கும்’

‘ஊழையும் உப்பக்கம் காண்பர் - தாழாது உஞற்றுபவர்’

என்றெல்லாம் வள்ளுவர் சொன்னவை பற்றி எனக்கு நிறைய நம்பிக்கை உண்டு.

முயற்சி செய்வோம். மரபணுத் தாக்கத்தையும் மீறி வெற்றிகள் படைப்போம்.

நம்பிக்கையுடன்

விடா முயற்சியுடன்

விதியையும் மதியினால் வெல்லலாம்.

❖ ❖ ❖

Duko - Dulux-Pentalite மற்றும்

lanka Pride தயாரிப்புக்களுக்கு-

யாழ் நகரில் நாட வேண்டிய இடம்

T.RASIAH & SON

த.இராசையா அன் சன்

23/10, Stanley Road, Jaffna

இரண்டு கவிதைகள்

"படிமங்கள் குந்தியெழுந்து
பழுத்துப் போனதென் முகம்
ஒவ்வொன்றாய்க் கழற்றி எறிந்து
அல்லது
செட்டையுரித்து
வளர்ந்து தான் பார்க்கின்றேன்
புதுத் தோலாய் பின்வுகிறது படிமம்
பின்னோக்கியே....
கலைத்துக் கட்டும் கூட்டிற்குள்
உறவு கொண்டு
படுத்தெழும்பிக் கனவுக்கழைக்கும்.
விரும்பாமலே
படிமங்களின்அறிவுறுத்தல்
கீழாக்கும்
ஏறிமிதித்துப் போகிற
அசட்டுச் சிரிப்புகளின் கோசம்
பறைதட்டும்.
இது நாளாய்ச் சுமந்த உடல்பார்த்து,
கேவலம் சூட்டி...
நெஞ்சுவட்டத்துள்
எரிமலை குழம்ப,
இப்போமட்டும்
பாழாய்ப் போன படிமங்களின்படி
எரிக்கத்தான் முடியவில்லை ஊரை'

(ஜுன் 97)

'உருப் போட்டுவிட்டுப்
பேசினார்கள்
பேச்சுத் தெளிவற்றதால்
அல்லது
தெளிவற்றதையே பேசுவதால்
ஒரு எழுப்பம்
அலட்சிய நகைப்பு
எச்சில் துப்பல் போலக்
காலடியில் காய்கிறது பேசுபொருள்
கீழ்க்கோடு பிரித்துப்
பாயுஞ்சூரியனும் அறிவான்
விளிம்பில் நின்று கூத்தாடும்
வாழ்வு பற்றிக் கூக்காட்டும்
மரங்களிற்கல்லவே மரணம்
எப்போதும் போல
அப்பாவியாய்ச் செத்துப்போகின்றனர்
மேற்றிசையிற் சூரியர்கள்'

~ஆகர்ஷியா~
(1998)

பெயர்

தனி இதழ்
20/-
சிறப்புத் தொகுப்பு
100/-

சமூக-அரசியல்-
கலை-இலக்கிய சஞ்சிகை

ஆசிரியர்கள் : த.வேலவன். மு.மயூ ரன்
தொடர்புகளுக்கு-
ஆசிரியர்
'பெயர்'
157,கடற்படைத்தள வீதி
திருக்கோணமலை
026-27753

அலை அ. யேசுராசா - முப்பத்தைந்து இதழ்களே வெளியான போதும் ஈழத்து நவீன தமிழ் இலக்கியத்திற்கு காத்திரமான பங்களிப்புச் செய்த 'அலை' சஞ்சிகையின் ஆசிரியர்.

ஒரு வாசகராக, கவிஞராக, சிறுகதையா ளராக, விமர்சகராக, மொழிபெய ர்ப்பா ளராக, பத்தி எழுத்தாளராக, சினிமா இரசிகராக பல தளங்களில் சமூகப் பிரக்ஞை யுடன் தொடர்ந்து செயற்பட்டு வருபவர். தொண்ணூறுகளின் நடுப்குதியில் இளங்கவிஞர்களை ஊக்குவிக்கவென்றே 'கவிதை' இருமாத இதழ் நடாத்தியவர்.

'ஒரு கலை இலக்கிய இரசிகன் எனும் போது என் முதற்காதல் சினிமாதான்' எனக் கூறும் யேசுராசா சிறந்த திரைப்பட விமர்சகர். நல்ல திரைப்படங்கள் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டவர். யாழ் திரைப்பட வட்டம் (1979-81) அமைத்துச் செயற்பட்டவர்களில் ஒருவர். யாழ் பல்கலைக்கழக திரைப்பட வட்டத்தின் திரைப்படக் காட்சிகளில் பங்கெடுத்து வருபவர்.

திருமறைக் கலாமன்றம் கடந்த ஆண்டு செப்டெம்பர் 20.21,22ம் திகதிகளில் தமிழ்விழா நடத்தியது. யாழ் பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத்தூது மணிமண்டபத்தில் கருத்தமர்வுகள் நடைபெற்றன.

இரண்டாம் நாள் அமர்வில் "தமிழ்த் திரைபடங்கள் : மாயையும் யதார்த்தமும்" என்ற பொருளில் அ.யேசுராசா ஆற்றிய உரையைக் குறிப்பெடுத்துத் தொகுத்துத் தருகிறார் துளசிராம், யாழ்ப்பாணம்.

தமிழ்த்திரைப்படங்கள் : மாயையும் யதார்த்தமும்

1903 இல் முதற் திரைப்படமான Great Train Robbery வெளிவந்தது. 1927 இல் முதல் பேசும்படமான Jazz Singer வெளிவந்தது தமிழில் 1931 இல் மகாவீர் காளிதாஸ் முதல் பேசும்படமாக வெளிவந்தது.

தமிழ் சினிமா தொடக்க காலம் முதலே தவறான ஒரு அணுகுமுறை யைக் கொண்டுள்ளது. ஆரம்பகாலத்தில் இருந்தே பேச்சு, பேச்சு என ஒரே பேச்சாக அமைந்துள்ளது. சிவாஜியும் பேச்சு! M.G.R.உம் பேச்சு! என்று ஒலிச்சித்திரத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து வந்துள்ளது. காட்சிக்கு முக்கியத்துவம் கொடுபட வில்லை. இன்றுவரை இந்த பேச்சு தொடர்கின்றது காட்சிகளினூடாக கதைக் நகர்த்தப்பட வேண்டும் என்ற சினிமாவில் அடிப்படைக் கோட்பாடு பின்பற்றப்ப டுவதில்லை. ஆங்கிலேயர் ஒருவர் யாழ்ப்பாணத்தில் தேநீர் கடைஒன்றில் பலபேர் கூடிநின்று ஒலிச்சித்திரம் கேட்டுக் கொண்டிருந்ததைக் கண்டு - "தமிழ்மக்களிற்கு திரைப்படம் ஒலிச்சித்திரமாக இருந்தால் போதும்" என்று குறிப்பிட்டார்.

படத்தின் வெற்றியை எத்தனை நாள் திரை அரங்கில் ஓடுகிறது என்பதைப் பொறுத்தே கணிக்கின்றனர். சினிமா என்பது (கலையைச் சுவைத்தல் கூட) பொழுது போக்கு என்ற மாயை நிலவுகிறது. பெரும்பாலானோர் சினிமாவையும் சரி, கலைப்படைப்புகளையும் சரி சிந்தனைக்குட்படுத்துவதில்லை. "அது என்ன சொல்கிறது. அதில் சொல்லப்படும் அல்லது காட்சிப் படுத்தப்படும் விபரங்கள் யதார்த்தமானவையா? சமூகபட பிரக்ஞை உள்ளனவா? போன்ற கேள்விகளுக்கு உட்படுத்துவது இல்லை.

மௌனமான காட்சிக்கு ஊடாக, பின்னணி இசைக் கூடாக கதை வெளிப்படு த்தப்பட வேண்டிய தேவை இன்றியமையாதது. சினிமா ஒரு (Visual media) காட்சி ஊடகம். அதனை சார்லி சப்ளின் என்ற கலைஞன் நன்கு பயன்படுத்தியு ள்ளார். ஒரு சில வாசகங்கள் திரையில் இடம் பெறும். ஒரு சில வரிகள் கதையை பார்வையாளர் புரிந்துகொள்ள போதுமானது. படத்தின் மையக் கருத்தை வெளிப்படுத்தும் இசை (Theme musiv) திரும்பத் திரும்ப இடம் பெறுகின்றமை நல்ல ஒரு விடயமாகும் இன்றைய தமிழ் சினிமா யதார்த்தத்தில் இருந்து வெகு தொலைவில் நிற்கிறது. ஆனால் யதார்த்தபூர்வமான படங்கள் முற்றிலும் இல்லை என்றும் சொல்ல முடியாது.

இவ்வகையில் தமிழில் வெளிவந்த படங்களுள் 'உதிரிப்பூக்கள்', 'அழகி' போன்றவற்றை குறிப்பிடலாம். தமிழில் வெளிவந்த ஒரு சிறந்த படம் உதிரிப்பூக்கள்.

உதிரிப்பூக்கள் மக்களிடையே வரவேற்புப் பெற்றது கலைப்படங்கள் வெற்றி பெற முடியாது என்ற கருத்தினை இச்சம்பவம் (படம்) மறுத்து நிற்கிறது.

தமிழ்படங்களில் பெரும்பாலானவற்றில் இடம்பெறும் கதை, பாடல்கள் மாயையே! பொருத்தமற்ற பாடல்கள், அண்மைக்காலப் படங்களில் பாலியல் வக்கிரம், வன்முறை நகைச்சுவை மிகையான உள்ளன. தமிழர்களிற்கு வழங்க ப்பட வேண்டிய பாலியல் கல்வி திரைபடங்களுடாக பிழையாக வழங்கப்ப டுகிறது. தற்காலப்படங்களில் காண்பிக்கப்படும் அண்ணன் தங்கை பாசம் தாய், தந்தை மீது பிள்ளைகள் காண்பிக்கும் பாசம் மிகைப்படுத்திக் காண்பிக்கப்படுகிறது. எல்லாம் படங்களும் ஒரு Firmula (சூத்திரம்) விற்குள் நிற்கின்றன. காதல், அண்ணன்- தங்கை பாசம் என ஒரு சூத்திரத்திற்குள் தான் பெரும்பான்மையான தமிழ்த் திரைபடங்களில் காட்டப்படுகிறது.

'நேசம்' என்ற அஜித்தின் படத்தில் கோழிப்பண்ணை வைப்ப தற்கு கடன்(loan) எடுப்பதற்கு வங்கியில் கொடுக்கப்பட்ட விண்ணப்ப ப்படிவம் நிராகரிக்கப்படுகிறது. பின் முகாமையாளருக்கு ஒரு மகள் இருக்கின்றாள் அவளைக் காதலித்தால் கடன் எடுக்கலாம் என்று கதை தொடர்கிறது. இது தமிழ் சமூகத்தை குறிப்பாக சிறுவர், இளைஞர்களை ஆரோக்கிய மற்ற மாயை உலகுகள் இட்டுச் செல்கிறது. காதல் - என்ற உணர்வு இன்றய தமிழ்ப்படங்களில் காண்பிக்கப்படும் விதம் எத்தகைய மாயை?

தமிழ்ப் படங்களில் கதாநாயகர் அதிமனிதராக (Superman)காட்ட

முதற் திரைப்படம்

The Great Train Robbery

1895 இல் 'பகற்போசனவேளை' எனும் துண்டுப்படம் வெளியானது. 1903 இல் The Great Train Robbery வெளியானது. இதுவே கதைசொல்லும் (narrative) முதற் திரைப்படமாகக் கொள்ளப்படுகிறது.

இத் திரைப்படம் பத்து நிமிடமளவானதாக அமைந்தது. கறுப்பு-வெள்ளை நிறத்தில் பதினான்கு காட்சிகள் இடம் பெற்றன.

இதுவே முதற் திரைப்படம் என்பதால் காட்டுவதற்குத் திரையரங்குகள் எதுவும் இருக்கவில்லை. படம் பல்வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டுக் காட்டப்பட்ட போது பார்வையாளர்களின் கற்பனைக்கு எட்டாதவொன்றாகவே இருந்தது.

இத் திரைப்படம் ஒரு ரெயில் கொள்ளைச் சம்பவம் பற்றியது. இதற்கு முன் அசையும் படங்களைப் பார்த்திராத பார்வையாளர் தாம் நேரில் ஒரு கொள்ளைச் சம்பவத்தைப் பார்ப்பதாக எண்ணிப் பீதியுற்றனர்.

திரைப்படத்தின் கடைசிக் காட்சியில் கொள்ளையர் தலைவன் புகைப்படக் கருவியை நோக்கி அதாவது பார்வையாளரை நோக்கிச் சுடும் போது பார்வையாளர் தாம் உண்மையிற் சுடப்படுவதாக எண்ணிப் பயந்தோடினர்.

இத் திரைபடத்தை இயக்கியவர் Edwin S.Porter. இவர் எடிசனிடம் புகைப்படக் கலைஞராக வேலை பார்த்தவராவர். இத்திரைப்படம் New Jersy மற்றும் Delaware பகுதிகளில் படமாக்கப்பட்டது.

~வழிகாட்டி~

Edwin S.Porter.

ப்படுகின்றனர். துணை நடிகர்கள் முக்கியத்துவம் அற்று காட்டப்படுகிறார்கள். விதிவிலக்காக 'தண்ணீர் தண்ணீரில்' சிறு சிறுபாத்திர ங்கள் செம்மையாக சித்தரிக்கப்படுகிறது.

தமிழர்களில் படித்தவர்கள், பகுத்தாய்கின்ற விஞ்ஞானக்கல்வி பெற்றவர்கள் வைத்தியர்கள், பொறியிலாளர்கள் முதலானவர்கள் கூட தற்கால மிகைப்படுத்தப்பட்ட சினிமாவைப் பார்க்க திரையரங்கிற்கு ஓடுகின்றார்கள். ஒரு பொழுது போக்கை அங்கு என்ன விடயம் காட்டப்படுகிறது என்று பகுத்தாய முற்படாமல், மகிழ்ச்சி தருகின்ற ஒரு சாதனமாக சினிமாவை- நோக்குகின்றனர். இது பரம்பரை பரம்பரையாக வழிப்படுத்தப்பட்ட போக்காக காணப்படுகிறது. 'இதனை ஆராய்வது தேவை இல்லாத வேலை; எமக்கு என்ன!' என்ற மனோநிலை காணப்படுகிறது.

பிற மொழிப்படங்களுடன் ஒப்பிட்டு நோக்கு மிடத்து எமக்கு சிறந்த படம் என்று என்ன இருக்கிறது? நாம் மிகக் கீழே இருக்கின்றோம். தமிழில் யதார்த்தமான படங்கள் குறைந்தளவில் உண்டு.

1954- இல் வெளிவந்த அந்தநாள் - ஒரு கொலையைக்காண்கின்ற நான்கு பேரிடம் துப்புத் துலக்க விசாரணை. இப்படம் ஜப்பானின் புகழ் பெற்ற திரைப்பட இயக்குநர் அரிரோகுரோஸாவின் ரஸோமானின் (Rashowman) சாயலைக் கொண்டுள்ளது. அழியாத கோலங்கள், ஊமை உள்ளங்கள், பன்னீர் புஷ்பங்கள்- போன்ற படங்கள் குறிப்பிட்டு சொல்லக் கூடியன. இவை adolesence periodற்கு உரியவை.

அண்மையில் வெளிவந்த படங்களில் 'முகம்' - நாசரின் நடிப்பு. நிஜமான முகத்துடன் வாழமுடியாது போலிமுகத்துடன் தான் வாழமுடியும் என்பதைக் காட்டுகிறது. இன்றைய சமூகத்தின் போலித்தனத்தை காட்டுகின்றது என்று சொல்லலாம். இப்படத்தில் நாசரின் நடிப்பு சிறப்பானது.

குறிப்பிட்டுச் சொல்லவேண்டிய இன்னொரு படம் ரெறறிஸ்ற்.

"Terrorist" - சந்தோஷ் சிவன் இயக்கிய படம். யாழ்பல்கலைக் கழக திரைப்பட வட்டத்தில் அண்மையில் திரையிட்டார்கள். தற்கொலைப் போராளிகளைப் பற்றியது. தற்கொலைப் பெண் போராளி ஒரு மனித வெடி குண்டாகச் செயற்படுகின்றார். ஓர் அரசியல் கட்சிதலைவரைக் கொல்ல முதல் முயற்சியில் தவறிவிட்டனர். இரண்டாவது முயற்சியாக தற்கொலைப் பெண் போராளியை தயார் ப்படுத்துகின்றனர். தற்கொலை பெண்போராளி கர்ப்பமாய் இருக்கின்றார். போராட்டத்தை உச்சத்திற்கு கொண்டு போகின்றார். முடிவில் பெண் தற்கொலைப் போராளி இயக்கியை (Remot) அழுத்தவில்லை. நான் தயாரித்து இருந்தால் நிச்சயமாக குண்டை வெடிக்க வைத்திருப்பேன்.

ஆனால் போராளியின் மன உணர்வுகள் காட்டப்படுகின்றன. நாம் போராளியை குண்டை வெடிக்கவைத்து இறக்க வேண்டும் என்று எப்படிக் கூற முடியும்? நாம் போராளிகள் அல்ல. வெளியில் நின்று கொண்டு தன்னுயிரை மாய்த்து இலக்கை அடைய வேண்டும் என்று வற்புறுத்த எந்த உரிமையும் இல்லை.

ஆத்மா (14) நேர்காணலில் 'இயல்பான - நம்பத்தகுந்த கதை, செம்மையான பாத்திர உருவாக்கம், இயல்பான நடிப்பு, சம்பச் சூழலின் உணர்வு வெளிப்பாட்டிற்குத் துணை செய்யும் இசை - இயற்கை ஒலிகள் என்பன இணைந்து, இறுக்கமானதாய் - பிசிறல்கள் அற்று - வடிவ நேர்த்தியுடன் அமையும் திரைப்படத்தை நல்ல திரைப்படம் எனச் சொல்லலாம்' என்கிறார் யேசுராசா.

ஓரளவு தரமான 'நடுத்தரப் படங்களின்' பட்டியலும் தரப்பட்டுள்ளது இரசிகர்களுக்காக அப்பட்டியல் இங்கே மீள் பிரசரமாகிறது.

அந்த நாள், ஏழைபடும் பாடு, தாகம், திக்கற்ற பார்வதி, உன்னைப் போல ஒருவன், ஆக்கிரஹாரத்தில் கழுதை, குடிசை, உதிரிப்பூ க்கள், பூ ட்டாத பூ ட்டுக்கள், பசி, அழியாத கோலங்கள், அவள் அப்படித் தான், தண்ணீர் தண்ணீர், மறுபக்கம், கறுத்தம்மா, பாரதி, குட்டி, நிலாக்காலம், நாயகன், தேவதை, முகம், பன்னீர்ப் புஷ்பங்கள், ரெறறிஸ்ற், அழகி மற்றும் ஈழத்திரைப்படங்களில் பொன்மணி, காற்றுவெளி, முகங்கள், நிதர்சனம் தயாரிப்பில் வெளிவந்த பல குறும் படங்கள்.

இவ்விடத்தில் ஒருவிடயம்-அந்த பெண் போராளி துரோகியைச் கொல்ல தயங்கவில்லை. ஒரு போராளிச்சிறுவன் : அவன் அந்த தற்கொலைப் போராளியை காட்டுப்பாதை யூடாக அழைத்துச் செல்கின்றான். தற்கொலைப் போராளி ஓர் இந்திய இராணுவ வீரனை வெட்டிக் கொல்கின்றார். இதைப் பார்த்து அந்த சிறுவன் நீ ஒரு கொலைகாரி என்று அவளை வெறுக்கின்றான். துரோகியையும் இராணுவ வீரனையும் கொல்லத் தயங்காத போராளி, இறுதியில் அந்த அரசியல்வாதிக்கு மாலை அணிவித்து காரில் வீழ்த்து வணங்கும் போது குண்டை வெடிக்கச் செய்ய வேண்டும். மாலையை அணி வித்து, காலில் வீழ்கிறாள் இயக்கியை எடுக்கிறாள் அதன் ஆளியை அழுத்த வில்லை.

இப்படத்தில் காட்டப்படும் சிறுபோராளியின் தந்தையை உயிரோடு எரிக்கின்றது இராணுவம் அவனுடைய கண்முன்னே அக் கொடுமை நிகழ்கிறது சிறுவனுடைய கெஞ்சல் எதுவும் சம்பவத்தை தடுக்க முடியவில்லை. இதற்கு பிறகு அவன் போராளியாக மாறுகின்றான். பின்னர் சக பெண் போராளி இராணுவீரன் ஒருவனைக் கொன்ற போது அழுகின்றான். 'ரெறறிஸ்ற்' - தூர்தர்ஷனிலும் காண்பிக்கப்பட்டது.

தமிழில் யதார்த்தமான படங்கள் மிகச் சிலவே. நாம் முன்னேற நிறைய இடம் இருக்கிறது.

துளசிராம்
யாழ்ப்பாணம்

நீங்களும் எழுதலாம்

எழுத்துலகு புகத்துடிக்கும் இளையோரை ஊக்குவித்து அவர்தம் தரமான படைப்புக்களுக்குக் களமைத்துக் கொடுப்பது எமது பிரதான நோக்கங்களுள் ஒன்று.

உங்களது படைப்பு சிறுகதையாகவோ, கவிதையாகவோ, கட்டுரையாக வோ இருக்கலாம். அது உங்கள் சொந்தப் படைப்பாக இருத்தலே அவசியமானது.

இன, மத அரசியற் பக்கச் சார்பற்ற விதத்தில் சமகாலத்தைப் பதிவு செய்யும் படைப்புகள் வரவேற்கப்படுகின்றன.

கவிதைகள் மரபுக்கவிதையாகவோ புதுக் கவிதையாகவோ இருக்கலாம். கவிதையாக இருக்க வேண்டும் என்பதே முக்கியமானது.

அறிவியற் கட்டுரைகள், குறிப்புக்களை அனுப்புவோர் தாம் தகவல்களைப் பெற்றுக் கொண்ட விதத்தை குறிப்பிடுவது நல்லது.

ஆக்கங்கள் A4 அல்லது Foolscap தாளில் எழுதப்படுவது விரும்பத்த க்கது. ஒரு தாளில் ஒரு பக்கத்தையே பயன்படுத்த வேண்டும்.

புனைபெயர் பயன்படுத்தலாம். எனினும் சொந்தப் பெயர், முகவரி குறிப்பிடப்படாத ஆக்கங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டது.

மாணவர்கள் தம் பாடசாலை ஆசிரியரிடம்/அதிபரிடம் "சுய படைப்பு" என்பதை உறுதிப்படுத்தி ஆக்கங்களை அனுப்பி வைத்தால் அவற்றுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

இளையவர்கள் -குறிப்பாகப் பாடசாலைப் பருவத்திலுள்ளோர் இவ்வாய் ப்பை நன்கு பயன்படுத்திக் கொள்ளலாம்.

மாணவர்களுக்குப் பரிசுகள்

பிரசுரமாகும் பாடசாலை மாணவரின் தரமான ஆக்கங்களுக்கு பரிசுகள் காத்திருகின்றன.

பரிசு பெறும் வாய்ப்பை உறுதிப்படுத்த படைப்பு உங்கள் சொந்த ஆக்கம் என்பதைப் பாடசாலை அதிபர்/உப அதிபர் மூலம் உறுதிப்படுத்தி சொந்தப் பெயர், முகவரியைத் தெரிவாக எழுதி அனுப்புங்கள்.

வெட்டுதல், திருத்துதல் இல்லாமல் தெளிவாகத் திரும்ப எழுதி விரைந்து அனுப்புங்கள்.

உங்களை ஊக்குவிக்கவென்றே தரமான புத்தகப் பரிசுகள் காத்திரு க்கின்றன.

எமது முகவரி.

T.Kopinath
90/3, New Chetty Street,
Colombo-13

With Best Compliments from

விக்னேஸ்வரா நகைப் பூங்கா

Wigneswara Nakai Poonka

(Jewellers and Diamond Merchants)

34D, Kandasami Kovil Road
Vavuniya
Tel : 024-21910, 024-21857

34D, கந்தசாமிகோவில்
வீதி,
வவுனியா

With Best Compliments from

BIRUNTHAA JEWELLERS

பிருந்தா ஜுவல்லர்ஸ்
நகை வியாபாரம்

Guaranteed 22KT Sovereign gold Jewellery

297(301), கஸ்தூரியார்
வீதி,
யாழ்ப்பாணம்.

301, Kasturiar Road,
Jaffna

இளமைக்கு எழிலூட்டும்
தரம் குன்றாத் தங்க நகைகளை
உரிய தவணையில்
உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ள

வி.எம்.கே. ஜுவலர்ஸ்

கண்டி வீதி, சாவகச்சேரி

Genuine 22 Kt Jewellery
Manufacturing Jewellers

V.M.K. JEWELLERS

Kandy Road,
Chavakachcheri.

Tel : 070-212222989
0777-723021

தங்க நகை உலகில்
தன்னிகரில்லாத நிறுவனம்

மதனா ஜுவல்லறி
MATHANA JEWELLARY

உங்கள் ஓடர் நகைகள்
குறித்த தவணையில் நவீன வடிவங்ளில்
உத்தரவாதத்துடன்
பெற்றுக்கொள்ள

மதனா ஜுவல்லறி
177/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே. 222-5526

இணை நிறுவனம்

மைதிலி ஜுவல்லறி
190A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.